**தலையங்கம்:**

## மாசுற்ற மனதின் விபரீத விளைவு

இன்றைய தலைமுறை அச்சுறுத்தலுக்குட் பட்டிருப்பதற்கான காரணங்கள் அநேகம் உண்டு. எனினும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக ஆகியிருப்பது நிலம், நீர், வாயு இம் மூன்றும் மேலும் மேலும் மாசுப்படுத்தப்படு கிறது என்ற எச்சரிக்கையாகும். இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதன் மூலம், சூரிய கதிர்வீச்சின் கடுமையும், இதன் விளைவாக சூறைக்காற்று, பெருமழை, பெருவெள்ளம் போன்றவற்றால் பாதிப்புகள் தவிர்க்க முடியாத தாகி விடக்கூடும். மேலும் அல்லும், பகலும் அயராது விரைந்தோடிக் கொண்டிருக்கின்ற வாகனங்களின் பேரிரைச்சலும், இடி முழக் கங்களாக எதிரொலிக்கும் இசைக்கருவி களின் ஓசையும், மனித இதயத்திற்கு இதமளிப் பதாக இல்லை.

பொதுவாக இவைகள் மனித நலனுக்கு ஊறு விளைவிப்பன என்றாலும் இதைவிடவும் மேலான பேரபாயம் மனிதனுடைய மனதில் படிந்திருக்கும் மாசுகள் தான். மனிதன் தரித்திரத்திற்குட்பட்டவனாக சுயநலமியாக, பொறாமைக்காரணமாக, பேராசை மற்றும் கல் நெஞ்சமுடையவனாக, அசுர சுபாவமுடைய வனாக நிலை தடுமாறியிருப்பதற்கான காரணம் இந்த மன மாசு தான். இதனால் மனம் பலவீனப்பட்டு சமநிலை தவறிவிட்டது. இதன் பிரதிபலிப்பே இன்று நாம் அனுபவிக்கும் பலவத இயற்கை விபரீதங்கள். இத்தகைய எதிர்ப்புகள் மனிதனுக்கு புறத்திலிருந்து வந்தாலும், இது உண்மையில் அகத்தின் பிரதிபலிப்பே என்பதை மனிதன் உணர வேண்டும். ஆனால் இதை மனிதன் உணர்ந்த தாகத் தெரியவில்லை. ஆதலால் இந்த அறியாமையே இன்று மனிதனை எதிர் நோக்கியுள்ள மிகப்பெரிய அபாயமாகும்.

**சங்கமயுகம்**

**பொருளடக்கம்**


**மலர்: 27 ஏப்ரல்-மே 2013 இதழ்: 1**

| | |
|---|---|
| 1. தலையங்கம் | 01 |
| 2. பகவான் வாக்கு | 04 |
| 3. பெண்களே நீங்கள் நாராயணி | 05 |
| 4. சுட்டி - படு சுட்டி. | 10 |
| 5. சிந்திக்க | 12 |
| 6. சேவை செய்தி | 13 |
| 6. வெளி நாட்டு சேவை | 21 |
| 7. மகளிர் சக்தி | 26 |
| 8. பயம் என்பது கற்பனையா? | 29 |
| 9. கவிதை | 32 |

இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலி ருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும்.

ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



இன்றைய சமூக பொருளாதார நிலை, அரசியல் சூழ்நிலை பாதிக்கப்படுவதும், ஒருவர்க்கொருவர் எதிரியாக நினைத்துச் செயல் படுவதும் இயல்பாகிக் கொண்டே வருவதைப் பார்க்கின்றோம். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை விரோதிக்கிறது.. ஒருசிலர் பலரைப் பொருளாதார ரீதியாக, இராணுவ ரீதியாக, பாலுணர்வு ரீதியாக வஞ்சிக்கின்றனர். பலவீனப்படுத்துகின்றனர். மனிதன் சமுதாயத்தில் பாரபட்சமற்றவனாக நல்லிணக்கமுள்ளவனாக, ஆதரவாளனாக இருக்கும் நிலை மாறி விரோத மனப்பான்மை யுடையவனாக, களங்கமுடைய வனாக, வன்முறையாளனாக ஆகிவிட்டான். இது பொருளாதாரத்தில், அரசியலில், வாணிபத்தில், தொழில் துறையில், மற்றும் உறவில், பெரும் பாதிப்பை உண்டாக்கிக் கொண்டேயிருக்கின்றது. இதனால் உண்மையான அன்பும், மனித ஒழுக்கமும், நாகரீகமும் மறைந்து அமைதி குலைந்து, வாழ்க்கை சாரமற்றதாக, பெரும் சுமையாகக் கனத்துக் கொண்டிருக்கிறது.

வல்லரசுகள் ஆயுதங்களைக் குவிப்பதும், மனமாசின் காரணமாகவே தான். மாசுள்ள மனம் தான் பயம், சந்தேகம், போட்டி வன் முறை உணர்வுகளைத் தூண்டுகிறது. இதனால் ஆக்கத்தைப் புறந்தள்ளி, அழிவுக்கு முதலி டம் அளிக்கின்றான். பேராசை காரணமாக அன்பு காட்ட முடியவில்லை. கோபம், வெறுப்பு, காரணமாக வன்முறைக்கும், காம விகாரங்களின் காரணமாக ஒழுங்கீனத்திற்கும், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும், விரோதத்திற்கும், கற்பழித் தலுக்கும் காரணமாகி விடுகின்றன. சுய நலத்தால் நேர்மையற்ற சலுகைகள், பரிந்துரை களாக பிரதி பலி க்கின்றன. இவ்வாறாக மன மாசின் விளைவுகள் அண்டம் முழுவதுமே ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைப் பாக்கின்றோம்.

அப்படியானால், இதற்கு என்ன நிவாரணம்? மனிதன் என்பவன் பிறந்து, வளர்ந்து, இறந்து போய்விடும் ஒரு சாதாரண ஜந்து அல்ல. ஒரு சாதாரண சரீரமும் அல்ல. மனிதன் தன்னையும், பிறருடன் தனது உறவு எப்படியிருக்க வேண்டுமென்பதை அறிந்து நடக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றான். இதை உணர்ந்து செயல்படும் வரை பிரச்சினைகள் மனிதனைப்பிடித்து உலுக்கிக் கொண்டு தான் இருக்கும், ஒவ்வொருவரும் மகிழ்ச்சியோடும், சுகமாகவும் வாழ வேண்டு மென்றே விரும்புகின்றோம். அதே சமயம் அறிந்தும், அறியாமலும் ஒருவர்க்கொருவர் துக்கத்தையே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். துக்கத்தைக் கொடுத்து சுகத்தைப் பெற முடியுமா? நாம் எத்தனையோ பிறவிகளாக பகவானை வழிபட்டுக் கொண்டு வருகிறோம். எனினும் வாழ்க்கையில் அனுபவிப்பது என்னவோ அல்பசுகம் தான். இதுவும் மின்னலைப்போல் தோன்றி மறைந்து போவதே அனுபவமாக உள்ளது காரணம் நாம் வழிபடுகின்ற பகவான், யார், எங்கே, எப்படி இருக்கின்றார் என்பதை அறிந்து விதி முறைப்படி அணுகாத காரணத்தால் அவரிட மிருந்து நாம் பெறக் கூடிய சக்தியைப் பெற முடியாமல் இருக்கின்றோம். அதாவது நமக்கு பகவானிடம் உண்மையான சம்மந்தம் இல்லை. பகவானிடம் முக்தி வேண்டும் என்று கேட்டோம். முக்தி சரீரத்தை இயக்கிக் கொண்டி ருக்கின்ற ஆத்மாவுக்குத் தான். ஆனால் ஆத்மா என்பது என்ன? எங்கே எப்படியிருக் கிறது என்பதை அறிந்திருக்க வில்லை. பகவான் ஜென்ம, மரண சக்கரத்திலிருந்து விலகியவராக ,சதா புனிதராகவும், புனிதமுள்ள பரந்தாமத்தில் இருப்பதால் பரமாத்மா என்பதையும் புரிந்து கொள்ள வில்லை. மேலும் பல பிறவிகளாக மனித ஆத்மா பரமாத்மாவின் சம்மந்தத்திலிருந்து விலகியே இருந்தது என்பதையும் மீண்டும் இந்த சம்மந்தத்தை

நினைவுப்படுத்தி தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவே பகவான் அவதாரம் செய்கின்றார் என்பதையும் அறிவது அவசியம். இதனை உள்ளது உள்ளவாறு அறிதலே ஆத்ம ஞானம். இதனடிப்படையில் பரமாத்மாவை அன்போடு நினைவு செய்தலே தியானமாகும்.

இவ்வாறான புனித நினைவு மூலமாகவே மனதில் எழும் எண்ணங்களை நமக்கு ஆதர வான நல்லெண்ணங்களாக மாற்ற வேண்டும். இதன் மூலமே மாசு, மனதை விட்டு அகலும், இவ்வாறு மனதை சுத்தமாக வைத்துக் கொள்பவர்களே உத்தமமான மனிதர்கள். இவர்கள் தான் அமைதி அதிர்வலைகளை எண்ணத்தின் வாயிலாக வாயு மண்டலத்தில் பரப்ப இயலும்.

இவ்வாறாக மனதையும், இயற்கையையும், மாசிலிருந்து விடுவித்து, புனிதமாக்குவது, நாம் நமக்குச் செய்யும் உதவியாகும். இதன் அடிப்படையில் நல்லுலகு அமையும். இதற்காக இப்போது பரமாத்மா தந்தையாகிய பகவானை அறிந்து உணர்ந்து நினைவு செய்ய வேண்டும். இது தான் நமக்கு சுகத்தையும், சத்கதியையும் அளிக்கவல்லதாகும்.

## வாரிசுரிமைச் சொத்து

தந்தைக்குச் சமமாக ஆகவேண்டும் என்று குழந்தைகள் முயற்சி செய்து கொண்டிருப் பதைப் பார்த்து, தந்தை பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றார். முயற்சி செய்யாமலிருக்கும் குழந்தைகளை தந்தை விரும்புவதில்லை. ஏனெனில் அவர் தாயுமாகவும், தந்தை யாகவும் அல்லாது ஆசிரியராகவும் இருக்கின்றார். நன்றாகப் படிக்காமல் இருக்கும் மாணவனைப் பார்த்தால் ஆசிரியருக்கு மகிழ்ச்சியாயிருக்குமா?

பரமாத்ம தந்தை தன்னைப் போலவே குழந்தைகளையும் பார்க்க விரும்புகின்றார். இதற்காக அவசியமான ஞானத்தையும், அறிவுரைகளையும் வழங்கிக் கொண்டே யிருக்கின்றார். குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று திரும்பத் திரும்ப ஞாபகப் படுத்திக் கொண்டே இருக்கின்றார். எப்படி யெல்லாம் அன்போடு பாலனை செய்கின்றார்! பரமாத்மாவுக்கும், ஆத்மாவுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு என்றாலும் தந்தைக்குச் சமமாக ஆவதில் சிரமம் ஏதுமில்லை. எவ்வளவுக் கெவ்வளவு அவரைப்போல ஆகிக் கொண்டிருக்கிறோமோ, சேவை செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அவருடைய காரியத்தில் உதவக்கூடிய சிறந்த கருவியாக ஆகிக் கொண்டே இருப்போம். அவருடனேயே இருக்கும் மகிழ்ச்சியையும் அனுபவம் செய்வோம. இதனால் தந்தை மற்றும் குழந்தை ஆகிய இருவரின் விருப்பமும் நிறைவேறி விடும்.

தந்தைக்குச் சமமாக ஆவது என்பதன் பொருள், தந்தையிடம் என்னென்ன விசேஷ தன்மைகள், குணங்கள், சக்திகள் இருக் கின்றதோ அதனை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதாகும். இது வாரிசுரிமையாகப் பெறு கின்ற சொத்து இவ்வாறு பெறுகின்ற தகுதி குழந்தை களுக்கு இருக்கிறது என்று தந்தை நினைக்கின்றார். ஆதலால் குழந்தை களுக்கு அளிக்கின்றார். இதன் மூலம் குழந்தைகள் தந்தைக்குச் சமமாக ஆவதை எளிதாக்கி விடுகின்றார்.

குழந்தைகள் தந்தைக்குச் சமமாக ஆகிவிடும்போது, தந்தை என்ன காரியம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றாரோ அதனை குழந்தைகள் மூலமாகச் செய்கின்றார். ஆதலால் வாரிசுரிமையாகப் பெறக்கூடிய சொத்தை குழந்தைகள் ஏன் பெறக்கூடாது? அவர் எல்லோருக்கும் கடவுள் என்ற ஸ்தானத்தில் இருக்கின்றார். ஆனால் அவருடைய குழந்தைகளாகிய நமக்கு அவர் தந்தை தானே!




# பகவான் வாக்கு

என் அருமைச் செல்வங்களே!

உங்கள் மனதை எல்லா மனிதர்களிடத்திலிருந்தும், மத குருமார்கள் மற்றும் தேவதைகளிடமிருந்தும் விலக்கி ஜோதி பிந்து சொரூபமாக விளங்கும் பரமாத்மாவாகிய என்மீது திருப்புங்கள். ஆத்மா தூய்மையடையவும், சாந்தியில் நிலைக்கவும், சக்தியில் திளைக்கவும் இதுவே வழியாகும்.

உங்களைச் சுற்றிலுமுள்ள அனைவரும் உங்கள் சகோதர ஆத்மாக்களே என்பது சதா நினைவிலிருக்கட்டும். உங்கள் கவனம் உடல் தோற்றத்தைத் தவிர்த்து நெற்றியில் இரு புருவங்களுக்கிடையே பிரகாசிக்கும் ஆத்மாவின் மீது இருக்கட்டும்.

இவ்வுலகம் பெரிய நாடக அரங்கம். இந்த அரங்கத்தில் உங்களைப்போலவே பிறரும் நடிகர்களேயாவர். உங்கள் பாத்திரம் சிறப்பாக அமைய அனைத்தையும் சாட்சியாயிருந்து பாருங்கள். நாடகமேடையின் ஒவ்வொரு காட்சியையும், ஒவ்வொரு பாத்திரத்தின் அவசியத்தையும் புரிந்து கொண்டு திருப்தியோடிருங்கள். நாடகம் முடியும் தறுவாயிலுள்ளது. ஆதலால் வீடு திரும்பும் பயணத்திற்காக உங்களைத் தயார் செய்து எவர்ரெடியாக இருங்கள். சம்பூரணம் அடையும் வழி கடினமானதல்ல. நீங்கள் முதலில் உங்கள் மீது இரக்கம் காட்டுங்கள். அவகுணம் தவிர்த்து, குணத்தையே நாடி மேன்மை அடைவீர்களாக. நாடகத்தில் ஆத்மாவின் பங்கு அழியாத ஒன்று. ஆதலால் பரமாத்மாவுடன் ஐக்கியமாகி அழிந்து விடுவதில்லை.



# பெண்களே நீங்கள் நாராயணி (இலட்சுமி)

(தமிழாக்கம் - நன்றி ஞானாமிர்தம் மார்ச், 2013 இதழ்)

**பி.கு. சுந்தர்ராஜன், அண்ணாநகர், சென்னை**

எந்த பறவையும் ஒரு இறக்கையால் பறக்க முடியாதோ அது போலவே சமுதாயமோ, தேசமோ அல்லது பெண்டிரோ, ஆடவரோ - இரண்டில் ஒரு பிரிவின் மூலம் மட்டுமே முன்னேற்றம் என்பது ஏற்பட முடியாது. ஆண், பெண் இருவருக்குள் ஏதேனும் சிறிய அளவு வேறுபாடு இருந்தாலுமே கூட ஒருவர் மற்றொருவர் மீது விரோதம் பாராட்டாமல் முழுமையாகவே உள்ளனர். பாரத கலாசாரத்தின் படி இணைந்த முழுமையான சொரூபமாக விஷ்ணுவிற்கு நான்கு புஜங்கள் மற்றும் மகாலட்சுமியின் ரூபத்தில் காண்பிக்கப் படுகிறது. விஷ்ணுவின் நான்கு கைகள் மற்றும் மகாலட்சுமியின் நான்கு முறையே பெண் மற்றும் ஆணின் இரண்டிரண்டு கைகளின் இணைந்த ரூபம் தான் அது.

## ஆத்மாக்களிடையே ஆண்-பெண் பால் என்ற வித்தியாசம் இல்லை.

மகளிரின் பிறவி ஆடவர்களின் கால்களிலிருந்தோ, தலையிலிருந்தோ ஏற்படுவதில்லை அவர்கள் மீது ஆளுமை செலுத்தப்படுவதற்கு இரண்டு பேரின் சரீரமும் ஒரு பெண்ணின் கர்பத்திலிருந்து தான் பிறவி ஏற்படுகிறது. ஆத்மா (புள்ளி) ரூபத்தில் பிறவி எடுக்கிறது என்ற பேச்சே கிடையாது, ஏனெனில் ஆத்மா அழிவற்றது, ஆதி அந்தம் என்பது இல்லை. ஆண்-பெண் என்ற வேறுபாடு சரீரத்தை ஆதாரமாகக் கொண்டது இல்லையெனில் ஆத்மாவில் ஆண்-பெண் பேதம் இல்லை. சில ஆத்மாக்கள் ஆணாகவும், சில பெண்ணாகவும் இருக்கும். சரீரம் இல்லாதபோது அது போன்ற பாகுபாடு இல்லை. எல்லா ஆத்மாக்களும் மாறி மாறி பெண் அல்லது ஆண் சரீரம் எடுக்கின்றன (சுழற்சி முறையில்)

## இருபாலாரினுடைய வளர்ச்சி அவசியம்

நம் சரீரத்திலுள்ள கண்களில் வித்தியாசம் காண முடியுமா - வலது கண் சிறந்தது இடது கண் தரம் குறைந்தது மறுதலையாக இடது கண் சிறந்தது வலது தரம் குறைவானது என்று. இரண்டுமே சிறந்தது இரண்டின் காரியமும் ஒன்றே. இரண்டும் சேர்ந்துதான் சரீரத்திற்கு அழகூட்டுகிறது. இரண்டின் ஒத்துழைப்பினால் தான் செயல்கள் முழுமையாகிறது. ஒரு கண் மட்டுமே இருந்தால் ஒற்றைக் கண் உடையவர் என அழைக்கப்படுகிறார். அதே போல பெண் அல்லது ஆண் இரு வர்க்கத்தினரிடையே ஒரே மாதிரி வளர்ச்சி இல்லையெனில் சமூகம் அல்லது தேசம் ஒற்றை கண் உடையது போலாகி விடும்.

## பாதுகாக்கக் கூடியவர்கள் புறக்கணிக் கத்தக்கவர்கள் அல்ல

பாரதத்தின் தர்ம சாஸ்திரங்களில் பெண்களை மனைவி (பத்தினி) என்று கூறப் பட்டுள்ளது. ஸ்கந்த புராணத்தில் கணவன் தானம், சேவை, உபசரிப்பு மற்றும் தர்மம், புண்ணியம் முதலான என்ன செய்தாலும் அதில் பாதி பலன் எவ்வித முயற்சியோ உழைப்போ இன்றி மனைவிக்கு கிடைக்கின்றது என எழுதப் பட்டுள்ளது, ஏனெனில் பெண் என்பவள் அர்த்தநாரி (அதாவது ஆண் பாதி, பெண் பாதி) நிர்ணயாம் ருத் என்ற நூலில் பத்தினி பதிக்காக விரதம் (பதிவிரதா) பதி பத்தினிக்காக விரதம் இருப்பதாக எழுதப்பட்டுள்ளது. நம்முடைய மூதாதையர்கள் பெண்களை பத்தினி என்றனர்.

இதனுடைய கருத்து (தாத்பர்யம்) கணவன் மனைவியினுடைய இயல்பான (மூல) குணங்களை தாழ்வாக்கக் கூடாது, அவர் களுடைய முன்னேற்றத்திற்கு பாதகம் (தடை) செய்யக் கூடாது, உண்மையான விருப்பங்களை அழித்து விடக்கூடாது, அவர்களை அடக்கி வைக்கக் கூடாது, உதவியற்றவர்களாக (உதவாக் கரை) எண்ணக் கூடாது, அவர்களை ஆன்மீகம் அல்லது மதப்பற்று (பக்தி) முன்னேற்றத்தை வஞ்சிக்கக் கூடாது, மேலும் மூலையில் இருக்கும் படியாக செய்யக் கூடாது. ஒருவேளை யாரேனும் மேற்கூறியவாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களுடைய பாதி அங்கத்தை (உடல்) பலவீனப் படுத்திக் கொள்கின்றனர். பெண்கள் பாதுகாக் கப்படக் கூடியவர்கள், புறக்கணிக்கப்படக் கூடிய வர்களோ அல்லது ஒடுக்கப்படக் கூடியவர்களோ அல்ல.

எதுவரை சரீரத்தில் இரண்டு உறுப்புகளும் ( இரண்டு கண்கள், இரண்டு பாதங்கள், இரண்டு கைகள், இரண்டு காதுகள் முதலியன) சேர்ந்து வேலை செய்கின்றனவோ அதுவரை எந்த பிரச்சனையும் இருப்பதில்லை. ஆனால் ஏதாவதொரு இயற்கை விளைவுகள், எதிர்பாராத, உடல் சம்மந்தப்பட்ட விபத்துக்கள் முதலா னவைகளின் காரணத்தால் ஒரு வேளை இரண்டில் ஒரு உறுப்பு பாதிக்கப்பட்டால், அதன் ஒத்துழைப்பு இல்லாதபோது மீதமுள்ள மற்றொன்று (வலது அல்லது இடது) இரண்டு உறுப்புகளும் சேர்ந்து செய்யக் கூடிய காரியங்களினுடைய சக்தி பெறுகிறது. அவ்வாறில்லை என்றாலும் கூட குறைந்ததிலும் குறைந்ததாக குறைபாட்டை ஓரளவு நிறைவு செய்ய சக்தி வந்து விடுகிறது. இதே போன்று ஆண்-பெண் இருவரும் ஒருவருக்கொருவர் முழுமையாக இருந்தாலும் கூட ஒருவர் மற்றவருக்கு கட்டுப்பட்டவர் (அடிமை போல) அல்ல. ஒருவர் இல்லை என்றாலும் மற்றவர் இருவருடைய காரியங்களை செய்து காட்டுகின்றார். அவர் மற்றவருடைய குறையை நிறைவு செய்வதை காண முடிகிறது. சிவாஜி தந்தையினால் உதாசீனப்படுத்த தாய், சிவாஜியை மிகப்பெரிய வீரனாகவும், சரித்திரம் படைப்ப வராகவும் உருவாக்கினார். பெற்றோரின் அன்புக்கு வஞ்சிக்கப்பட்ட துருவனை அவரது தாய் மிகச் சிறந்த ஈஸ்வரனின் பக்தனாக உருவாக்கினார்.

## இல்லற ஆசிரமம் அனைத்தையும் விட உயர்ந்தது ஏன் ?

இல்லற ஆசிரமத்தை மற்ற எல்லா ஆசிரமங்களை விட (பிரம்மச்சர்யம், வான பிரஸ்தம், சந்நியாசம்) உயர்வாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது, ஏன் ? ஏனெனில் பிற மூன்று ஆசிரமங்களின் பராமரிப்பு , வளர்ப்பு இல்லறத் தின் மூலமாகவே நடைபெறுகிறது. எனவே தான் பாரதத்தில் புராதன காலங்களில் இல்லறவாசிகள் மொத்த வருமானத்தில் 10 சதவீதம் தானம் - புண்ணியம் ஆகியவற்றில் ஈடுபடுத்தினர். பிரஜாபிதா பிரம்மாவும் கூட தன்னுடைய லௌகீக வாழ்க்கையின் போது நியமப்படி தர்மத்தின் பெயரில் பத்தில் ஒரு பங்கை ஒதுக்கி வைத்தார். அதாவது உண்மையான அர்த்தம் என்னவெனில் இல்லறமும் கூட ஒரு தபோவனம், இதில் வாழ்வதே தபஸ்யா மயம் தான். ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் வைபவ ங்கள், சேவை, பரோபகாரம், தர்மம் பரமாத்மா மார்க்கத்தில் நடத்திக் கொண்டே தியாகம், சகிப்புத் தன்மை, தைரியம், விழிப்புணர்வு, முன் யோசனை ஆகியவற்றை தன்னுள் மேற்கொண்டு வீட்டை (இல்லறத்தை) சுகமானதாக அமைத்துக் கொள்ள முடிந்தது.

## ஆன்மீக பார்வையின் கோணத்தில் பெண்களின் சிறப்புத் தன்மை

ஆன்மீக பார்வை என்ற கோணத்தில் பார்ப்போமானால் பெண்கள் ஆடவர்களுக்கு

மேலாக உயர்வாகக் கருதப்படுகிறது. ஏனெனில் பரமாத்மாவை மேன்மையான கணவராக நினைத்து தன்னை அவருடைய அன்புக் குரியவன் (பிரியதர்ஷினி) என்று எண்ணி அன்பு அரவணைப்பை (ஆலிங்கனம்) செய்வது பெறுவது பெண்களுக்கு மிகவும் எளிது. ஆனால் ஆண்களுக்கு அந்த உயர்வான பிரியதர்ஷனை ஆலிங்கனம் செய்ய வேண்டுமானால் பெண்ணாக தரித்துக் கொள்ள வேண்டியுள்ளது மேலும் தன்னுடைய ஆண் என்ற கர்வத்தை முற்றிலுமாக துறக்க வேண்டியுள்ளது. இருப்பினும் இருபாலாருமே தமது தேக அபிமானத்தை விடுத்து ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருப்பது அவசியமாகிறது, மேலும் பரமாத்மாவை புரிந்து அனைத்தையும் அர்ப்பணம் செய்வது பெண்டிருக்கு இயற்கை யாகவே சுலபமாக உள்ளது. ஆடவர்களிடம் எப்பொழுது மகளிரின் குணங்கள் வருகிறதோ அவர்களும் மகான் ஆத்மா ஆகின்றனர்.

### புராதன காலத்தில் கன்னி புத்திரர்களுக்கு சமம்

புராதன காலத்தில் கன்னியருடைய போஷாக்கு, வளர்ப்பு புத்திரர்களுக்கு சமமாக இருந்தது. இதனுடைய நினைவார்த்தமாக இராமாயணத்தில் இராஜா ஜனகர் சீதையை தன் மடி மீது அமர வைத்திருக்கும் போதெல்லாம் அவரைப் போன்று சுகமான மனிதன் தன்னைப் போன்றவர் வேறு யாருமே இல்லை என்ற அனுபவம் செய்தாராம் - இது போன்று எழுதப் பட்டுள்ளது. புராணங்கள் சம்மந்தப்பட்ட பெண்கள் பார்வதி, சாவித்திரி, தமயந்தி, திரௌபதி முதலானவர் களும் கூட அரசு குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்களில் புத்திரர்களும் இருந்திருக்கக்கூடும் இருந்தாலும் அவர் களுடைய செல்லமான வளர்ப்பு பற்றி பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதால் இது மட்டுமே நினைவில் நிலைத்து விட்டது.

### பாரத பெண்மணிகளின் கெட்ட நாள்

சத்திய யுகம் மற்றும் திரேதா யுகத்தில் பெண்கள் உயர்ந்த நிலையில் இருந்தனர், வேத சாஸ்திரங்கள் காலத்திலும் மதிக்கப்பட்டனர். ஆனால் வெளிநாட்டினரின் ஆட்சியில் தங்களுடைய மாறுபட்ட பழக்கத்தை கொண்டு வந்தனர், பாரத பெண்களுக்கான கெட்ட காலம் வந்தது. பெண்களுடைய தகுதியும் பின்னடைந்து போயிற்று மேலும் அவர் களுடைய நிலையும் குறைந்து கொண்டே வந்து ஏதோ ஒரு அசைவில்லா பொருளுக்கு சமமாக ஆகிவிட்டது. காலப் போக்கில் பெண்ணினம் அடக்கி வைக்கப்பட்டவர்களைப் போல விவகாரம் ஆகிவிட்டது. மண வாழ்க்கையில் ஆடவர்கள் தேவதை போல ஆகி அந்த ஆதரவற்ற பெண்களுக்கு தான் ஒரு பூஜாரியாக ஆக்கப்பட்டு விட்டோம் என்று புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை தரவில்லை. காலணி (செருப்பு) மற்றும் வீட்டு வேலைக்காரி என்றே எண்ணலாயினர். சுதந்திரம் பறிபோயிற்று. பிணத் தின் ஆடைகளை எரித்து விடுவதைப் போல கணவன் இறந்த பிறகு அவரது ஆடைபோல உடன் கட்டை ஏற வைத்தனர் (கணவனோடு சிதையில் எரிக்கப்பட்டனர்). சில சமூக சீர்திருத்த ஆர்வலர்களின் கடின உழைப்பின் பலனாக பெண்கள் காப்பாற்றப்பட்டனர். தற்காலத்தில் ஆட்சி பீடத்தில் அதிகாரம் பெற்றிருந்தாலும் கூட மனமாற்றம் ஏற்படாத காரணத்தால் அதிக அளவில் சட்ட திட்ட அதிகாரங்களில் இடம் பெறாமல் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். கன்னிகள் கரு சிதைப்பு, பெண்கள் எரிக்கப்படுவது வரதட்சிணை கொடுமை, பாலின வேறுபாடு, கெட்ட (எண்ண) பார்வை முதலானவைகளால் இன்றைய நாட்களில் கூட தனது ஆதரவற்ற கதைகளை கூறுகின்றனர். அறிவியல் நன்மை பயக்கக் கூடியதாக இருந்தாலும் குறுகிய நோக்கத்தின் காரணத்தால் மனிதன் இன்னமும் கூட காட்டு வாசிகள் போலுள்ளனர்.

### கன்னியர்கள் தங்களது பாக்கியத்தை எடுத்து வருகின்றனர்.

ஆண் பிள்ளைகள் தங்கள் தந்தையின் பாக்கியத்தினால் வாழ்கின்றனர், ஆனால் கன்னியர்களோ தங்களுடைய பாக்கியத்தை எடுத்து கொண்டு உலகத்திற்கு வருகின்றனர் - இவ்வாறு ஒரு பழமொழி உள்ளது. எந்த ஒரு இடம், தேசம், காலத்திலும் பெண்களுக்கு அவமானம், புறக்கணிப்பு, தாழ்வு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் பெண்களின் மனத் துயரம் உலகின் இயற்கை சூழலில் எதிரொலிக்கும். படைப்பின் முழுவதிலும் வாயு மண்டலத்தில் அதன் தாக்கம் ஏற்படுகிறது. இதன் காரணமாக இயற்கை சீற்றங்கள் என்ற ரூபத்தில் வினாசத்தின் ஆரம்பமாகிறது. ஆகவே எந்த ஒரு நாடு - பிரதேசம் (மாநிலம்), சமூகம், ஜாதி, பரிவாரம் மற்றும் வீட்டில் செல்வ செழிப்பு, வளமை, முன்னேற்றம், அமைதி மற்றும் ஆரோக்கியம் ஏற்படுவதற்கான மூல மந்திரம் - பெண்களை தேவிகளுக்கு சமமாக மதிப்பு மரியாதை கொடுக்க வேண்டும் அதனால் அவர்களின் நாராயணி (இலட்சுமி) சொரூபத்தின் சாட்சாத்காரம் ஆகட்டும், ஆத்மா சொரூபத்தின் விழிப்புணர்வை ஏற்படுத்தும் படிப்பினை கொடுக்கட்டும்.

### ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் தெய்வத் தன்மை மேலெழட்டும்

இன்று ஆண் வர்க்கத்தினர் ஒருவேளை துயரமான நிலையில் இருக்கின்றனர் என்றால் அதற்கு மூல காரணமாக எங்கோ பெண் தெய் சக்தியின் அவமானம் மற்றும் அவர்களுக்கு அநியாயம், ஒரு தலை பட்சமாக தவறிழைத் திருக்க வேண்டும். ஆண்களுக்கு தங்களின் நடத்தை, சுபாவம் மற்றும் விவகாரங்களின் பிரதிபலன் தான் மகளிரிடமிருந்து கிடைக்கிறது. அதாவது மாதர்களின் தெய்வீக சொரூபத்தின் மேன்மையை அறிந்து அதை பெருமைப் படுத்துவதால் மட்டுமே நன்மை ஏற்படக்கூடும். மாதர்கள் தங்களுடைய சரீரத்திற்கு அழகூட்டும் வேலையில் (பழக்கம்) ஈடுபடாமலிருந்து தன்னை ஆத்மாவென உணர்ந்து தன்னுடைய உறங்கிக் கிடக்கும் தெய்வீகத்தன்மையை விழித்தெழச் செய்தார்களேயானால் ஆண் வர்க்கம் தானாகவே மரியாதையை பரிசாகப் பெறுவார்கள்.

### விவாகத்தின் (திருமணம்) நோக்கம் (பரமாத்மாவுடன்) தொடர்பு சுகபோகம் அல்ல

விவாகம் என்பது ஒன்று ஆன்மீகம் மற்றும் தெய்வீக சம்மந்தப்பட்டது எனில் அது இரண்டு ஆத்மாக்களின் சந்திப்பாகும். அதனுடைய முக்கியமான நோக்கமே பரமாத்மா வுடன் இணைவதாகும் சுகபோகம் (இந்திரிய சுகம்) அனுபவிப்பதல்ல. மானிட வாழ்க்கையில் சுகம் அனுபவிப்பது குறிக்கோள் இல்லை, பரமாத்மாவோ தொடர்பு (யோகம்) கொள்வதுவே முக்கியமானது. ஆண், பெண் இருபாலரும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந் தாலும் கூட யாரெல்லாம் பரமாத்மாவை இடையில் வைத்துக் கொள்கிறார்களோ அவர்களே பரம சௌபாக்கியசாலிகள். எப்பொழுது காம குத்துவாளை தங்களுக் கிடையில் வைத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு அரிய வருமானம் சூன்யமாகி (ஒன்றுமில்லாமல்) விடுகிறது. இந்த குத்துவாள் சுகம், சாந்தி மற்றும் முன்னேற்றத்தை துண்டித்து விடுகிறது. இராமனை (சிவபாபா) இருவருக்குமிடையே வைத்துக் கொள்ளும் போது வரவு நூற்றியொரு மடங்காகி விடும். இராமனுடைய தொடர்பு நூறு மடங்கு என்ன பல மடங்கு சுகம் வெகுமதியாகக் கொடுக்கிறது.

### ஆத்மாவின் எல்லா உறவும் பரமாத்மா வோடு

உலக நாடக மேடையில் சரீரம் என்ற ஆடையை அணிந்து கொண்டு பல்வேறு நடிகர்களுடன் சேர்ந்து தனித்தனியான பாகத்தை ஏற்று நடிக்கின்றோம். வெவ்வேறு சேர்ந்து

தனித்தனியான பாகத்தை ஏற்று நடிக்கின்றோம். வெவ்வேறு உறவு முறைகளில் சேர்ந்து நடிக்கிறோம். ஆனால் ஆத்மா சரீரத்திலிருந்து விடுபட்டு அனைத்து உறவிலும் ஒரே ஒரு பரமாத்மாவிடம் மட்டுமே. ஆகவே தான் த்வமேவ மாதா ச பிதா த்வமேவ ........ சர்வ மம தேவ-தேவ ! ( தாயும் தந்தையும் நீங்களே.... தேவாதி தேவா எனக்கு அனைத்துமாக இருப்பவர் நீங்களே) என்று கூறுகிறோம். உலக நாடக மேடையில் நடிப்பை ஏற்று நடிக்கும் போது ஏதோ ஒரு பெண்ணினுடைய நடிப்பின் பாகம் மனைவி ரூபத்தில் இருக்கும் சமயம் ஒரு முறை சந்திப்பின் பிறகு கணவன் பிரிந்து விடலாம், ஒரு தாய்க்கு குழந்தை கிடைக்கிறது அல்லது கிடைத்த பிறகு அது ஏமாற்றப்படலாம், ஆனால் பரமாத்மா ரூபத்தில் இருக்கும் கணவனையோ, குழந்தையையோ யாராலும் பறிக்க முடியாது. ஒரு ஆத்மா பரமாத்மாவுடன் எல்லா வித சம்மந்தத்தினாலும் சுகத்தை பெறுவதிலிருந்து எந்த ஒரு சமயத்திலும் அல்லது சந்தர்ப்பத்திலும் ஏமாற்றப்பட முடியாது. எனவே கணவன், தந்தை, குழந்தை (மகன்) இவர்களின் குறைபாட்டினால் தன்னை துர்பாக்கியசாலி என்று எண்ணுவதற்குப் பதிலாக பரமாத்மாவினிடம் அத்தகைய எண்ணத்தை (உறவை) நிலையாக வைத்துக் கொண்டு பல பல மடங்கு பாக்கியசாலி ஆவதற்கான அனுபவத்தை செய்யுங்கள்.

### பரமாத்மாவின் தோழமை இருந்தால் பயம் இல்லை

காலப் போக்கில் அனைத்து சம்மந்தங் களும் விலகி போய் விடுகின்றன. ஆனால் இறுதி காலம் வரை பரமாத்மா தந்தை தான் துணையாக தொடர்ந்து இருக்கின்றார். பரலோகத்திலும் கூட ஒளிக்கிரணங்கள் ரூபத்தில் கைகளை விரித்து வரவேற்கின்றார். எவ்வாறு கணவனோடு வாழ்கின்றபோது மற்ற ஆடவனின் கண் உயர்த்திப் பார்க்க முடியாதோ அதே போல் பரமாத்மாவின் தொடர்பில் இருக்கும் போது யாரும் அச்சுறுத்தும் பார்வை செலுத்த முடியாது. சரீரத்தின் துணைவர், சரீரம் எரிந்த பின் பார்வை செலுத்த முடியாது. சரீரத்தின் துணைவர், சரீரம் எரிந்த பின் மறந்து விடுகிறார். ஆனால் ஆத்மா வின் உண்மையான துணைவராகிய பரமாத்மா தேகம் என்ற திரை (ஆடை) விலகிய பின் ஆத்மாவிடம் மேலும் அதிகமாக நெருக்கத்தில் வருகிறார்.

### ஞானம் என்ற கண்ணாடியின் பரிசு

பெண்களிடம் இயற்கையாகவே கண்ணாடியில் தன்னை பார்த்துக் கொள்ளும் பழக்கம் உண்டு. ஞானக் கண்ணாடியில் பார்க்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது சுயம் பரமாத்மாவே ஞான ரூப கண்ணாடியை பரிசாக நம் அனைவருக்கும் தருகின்றார். இதில் மிக எளிதாக ஒரு நாளில் பல முறை தன்னுடைய சொரூபத்தைக் காண முடியும். மனதை கறை இல்லாத வைரத்தைப் போல மாற்றிக் கொள்ளுங்கள். இதற்காக பகவான் தங்களுக்கு இலட்சுமியைப் போல சரீரத்தின் ஆடையை அணிவித்து உலகிற்கு காட்ட முடியும். பெண்கள் எப்போது உடல் - மனதினால் தெய்வீக அதாவது நாராயணியாக ஆனால் உலகம் சொர்க்கமாக ஆகிவிடும்.

**கருணையை கண்களிலும், இதயத்தில் ஈரத்தையும்,**
**மனம் என்ற மாளிகையில் அன்பையும் நிரப்பியவர்கள் தான்**
**வாழ்க்கை பாடத்தை நன்கு கற்றவர்கள்**

# சுட்டி, படுசுட்டி



**சுட்டி:** அண்ணே! பகவான் இந்த உலகத்தை விளையாட்டுப்போல படைச்சாரு, அப்படீங் கிறாங்க. இன்னிக்கு இந்த உலகம் இவ்வளவு அசாந்தியாயிருக்கு. இந்த மாதிரி உலகத்தைப் படைக்கிறதுலே, பகவானுக்கு என்ன சந்தோஷமிருக்கு?

**படுசுட்டி:** தம்பி! அசாந்தியான உலகை பகவான் படைச்சார்னு யார் சொன்னது?

**சுட்டி:** நீங்க சொல்லலை தான். சந்தேகத்தைத்தான் கேட்டேன்.

**படுசுட்டி:** தம்பி! சாஸ்திரத்திலே கூட சிருஷ்டி அநாதி ன்னு தான் சொல்லியிருக்காங்க. எப்ப உலகம் அசாந்தியாயிடுதோ, அப்ப, பகவான் சுகமான சொர்க்கமாக மாற்றுகிறார். அப்போ எல்லோரும் சுகமாத்தான் இருக்காங்க. ஆனால் நாளாக, நாளாக, மனிதர்கள் தான் தங்கள் தவறான செயல்களாலே அசாந்தியா ஆக்கிடுறாங்க.

**சுட்டி:** அப்படித்தான் இருக்கனும் அண்ணே. நினைச்சுப் பாத்தா, நாம கூட ஒரு பொருளை அழகாத்தானே செய்றோம். பகவானுடைய சிருஷ்டி நல்லாத்தான் இருக்கணும்.

**படுசுட்டி:** இப்ப புரிஞ்சிட்டிங்களா?

**சுட்டி:** அண்ணே! பகவானை நினைவு செய்யறதுக்கு பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கணுமின்னு சொன்னீங்க. ஆனா, பெரும்பாலும் கடவுளை நினைக்கிறவங் கெல்லாம். அப்படி இருக்கிறாப்பலே தெரியலையே.

**படுசுட்டி:** கடவுள் நாமத்தை ஜெபிக்கிறதுக்கும் கடவுளோட சம்மந்தம் வைக்கிறதுக்கும் வித்தியாசமிருக்கு.

**சுட்டி:** அப்படின்னா, அவசியமா பிரம்மச் சரியத்தைக் கடைப்பிடிக்கனும் னு சொல்றீங்க. சரியா?

**படுசுட்டி:** ஆமா தம்பி. அவசியம் கடைப்பிடிக்கத்தான் வேணும். நீங்க வேணும் னா விவரம் தெரிஞ்ச பண்டிதர்களைக் கேட்டுப்பாருங்க. ஏன்னா, பகவான் நினைவு, சம்மந்தங்கிறது மனம், புத்தி சம்மந்தப்பட்டதா இருக்கு. பிரம்மச்சரியம் கிற சூட்சும சக்தி இல்லாம புத்தி பரிசுத்தமாகாது. புத்தி சுத்தமாகலேன்னா அனுபவம் ஆகாது. புரியுதுங்களா?

**சுட்டி:** சரி. படைப்புலே ஆண், பெண், இரு ஜாதி இருக்காங்க. அப்படியிருக்க, பிரம்மச்சரியம் விரோதமா படுதில்லே.

**படுசுட்டி:** தம்பி! உங்க சந்தேகம் எனக்குப் புரியுது. நமக்கு எவ்வளவு தெரிஞ்சிருந்தாலும் அற்பமானது தான். பகவான் வாக்கு என்ன தெரியுமா? காமம் மகா சத்ரு. இதுலே வெற்றி அடையறதுக்காக அவரே இராஜயோகம் கற்றுத் தாரார். இந்த யோகம், மனம், புத்தி சம்மந்தப் பட்டதா, இருக்கிறதாலே, இதைப்பற்றி மனிதர்களுக்குத் தெரியாது. இதனாலே தான் நானே இப்பூமிக்கு வர்ரேன் னு சொல்றார். என்ன சொல்றாருன்னா, இப்பிறவியிலே இது கடைசி நேரம். ஆண், பெண் இருவரும் ஒருவர்க் கொருவர் உதவியாயிருந்து தூய்மையாக வாழ்ந்து உலகம் அமைதி நிறைந்த சொர்க்கமாக ஆகிறதுக்கு யோக தானம் செய்யுங்கன்னு சொல்றார்.

**சுட்டி:** அண்ணே! நீங்க சொல்றது சரி தான். இது சாத்தியமானதா?

**படுசுட்டி:** தம்பி! நாம சொல்றதாயிருந்தா, சாத்தியமில்லை ன்னு சொல்லலாம். ஆனா, சொல்றது யாரு? அவர் சொல்றார். நீங்கள் இந்த சரீரமில்லே. நிலையான ஆத்மா. உங்களுடைய சுய சொரூபம் தூய்மையானது. உங்களுடைய முன்னோர்கள். தூய்மையாகத்தான் வாழ்ந்தார்கள். இடையிலே விகார குணங்கள் வந்திருச்சி ஒவ்வொரு கல்பத்துலேயும் தூய்மையாக

ஆகியிருக்கிங்க. அதுபோல இப்பவும் அப்படி ஆகணும் னு சொல்றார்.

**சுட்டி:** அண்ணே! பகவான் சொல்றார். அதுனாலே நாம் கேட்டு நடக்கத்தான் வேணும். ஆனா ரிஷி முனீங்கெல்லாம் சாத்தியமில்லேன்னு தானே குடும்பத்தை விட்டுட்டு காட்டுக்குப் போனாங்க.

**படுசுட்டி:** தம்பி! கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. எல்லாத்துக்கும் மனசு தானே காரணம். நம்ம வீடுகள்ளேயும், நமக்குக் கூடப்பிறந்த பெண்கள் இருக்காங்க. நாம சகோதர பாவனையா பழகல்லியா? இது மட்டும் எப்படி சாத்தியமாகுது. நம்ம புத்தியிலே இவங்க நம்ம சகோதரிங்கிறது புரிஞ்சிருச்சு. இல்லையா? அதுனாலே சொல்றதை நாம் கொஞ்சம் சிந்திச்சுப் பார்க்கணும். தம்பி பகவான் பேர்ல நம்பிக்கையும், மனசுலே உறுதியும் வச்சிட்டா, இது ஒன்னும் பெரிய விஷயமில்லை தம்பி.

**சுட்டி:** சரி தாண்ணே. நமக்கு நாளை என்னநடக்குமுன்னு தெரியாது. அதுனாலே பகவான் நம்ம நன்மைக்குத்தான் சொல்றாங்கிறதைப் புரிஞ்சு நடக்கிறது தான் நல்லதுன்னு படுது.

**படுசுட்டி:** ஆமா தம்பி! அப்படித்தான் நடக்கணும் கிறதைப் புரிஞ்சீட்டீங்க. நல்லது தம்பி.




## அமைதி

தனக்கும் மற்றவர்களுக்கும் அமைதியைக் கொடுப்பது தான் உண்மையான சேவை. அமைதி என்றால் பகவான் தரும், ஞானம், யோகம் மற்றும் தாரணையில் இருப்பது. நேரத்தின் மதிப்பை உணர்ந்து காரியங்களை செய்வது. அமைதியாக இருந்து காரியங்கள் செய்வது வாய் மூலமாக பேசுவதை விட அதிகமான காரியங்களை செய்ய வைக்கும்.

### *அமைதி என்பது...*

சிக்கனமாக வாழ்வது

அதிகப்படியான (தேவையற்ற) எண்ணங்கள் இல்லாமலிருப்பது

ஆத்ம உணர்வை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வது

முழுமை மற்றும் சம்பூர்ண நிலைக்கு அருகில் நெருங்கி வருவது

மேலும் சத்தியமான பகவான் ஒருவர் வேறு யாருமில்லை என்று உணர்வது

கடந்த கால தவறுகளை மறந்து நேர்மையாக வாழ்வது

கடவுள் நான் என்னவாக இருக்க விரும்புகின்றாரோ அவ்வாறு என்னை மாற்றிக் கொள்வது

தனது எண்ணங்களின் தரத்தின் மீது கவனம் வைப்பது

ஒவ்வொரு ஆத்மாவின் சிறப்புத் தன்மையை புரிந்து மதிப்பளிப்பது

மற்றவர்கள் கோபத்தின் அனுபவத்தை போக்கும் அளவிற்கு தனது மன சக்தியை அதிகரிப்பது

சிக்கலான சூழ்நிலையில் கூட எளிதாகவே தீர்வுகாணக்கூடிய அனுபவம் பெறுவது

ஏதேனும் ஒரு முக்கியமான விஷயத்தை எதிர்கொள்ளும் போது சரியான சமயத்தில் வேறொருவரை கருவியாகப் பயன்படுத்தி இறைவன் அக்காரியத்தை முடித்து வைப்பார் என ஆழ்மனதில் நம்பிக்கை வைப்பது.

நான் எங்கு சென்றாலும் இவர் ஒரு தேவதை என அனுபவம் செய்யும் படியாக வாழ்வது.

# சிந்தியுங்கள்...



ஆரம்ப பாடசாலையின் ஒரு ஆசிரியை தன் மாணவர்களிடம் இறைவன் தனக்கு என்ன செய்ய வேண்டும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதும்படி கூறினார்.

அன்றை நாளின் இறுதியில் தனது வீட்டில் கட்டுரைகளை திருத்தி அதற்கு மதிப்பீடு போடும் போது ஒரு கட்டுரை அந்த ஆசிரியை உணர்ச்சி வசப்பட வைத்து விட்டது. அச்சமயம் அவரது கணவர் வீட்டிற்குள் வருகின்றார், மனைவி அழுவதைக் கண்டு என்ன ஆயிற்றென வினவினார். அவரோ இந்த கட்டுரையைப் படியுங்கள் என்றார்:

அந்த கட்டுரை இவ்வாறிருந்தது:-

இறைவா! இன்றிரவு முக்கியமாக ஒன்றை நான் கேட்கின்றேன் - என்னை ஒரு தொலைக்காட்சி பெட்டியாக மாற்றி விடுங்கள் - நான் அதன் இடத்தை பிடிக்க விரும்புகிறேன், என் வீட்டில் உள்ள தொலைக் காட்சி பெட்டியைப் போன்று வாழ விரும்புகிறேன்.

எனக்காகவே ஒரு தனி இடமும், அப்போது என் குடும்பத்தினர் என்னை சுற்றியிருக்க வேண்டும்.

நான் பேசுவதை அலட்சியப்படுத்தக் கூடாது, நான் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் மையமாக இருக்கவும், இடையில் குறுக்கிடவோ கேள்விகளோ கேட்காதிருக்க வேண்டும்.

தொலை காட்சி பெட்டி பழுதாகி வேலை செய்யாதபோது அதற்கு தரும் சிறப்பு கவனம் தருவதைப்போல நானும் பெற விரும்புகிறேன். என் தந்தை வேலையிலிருந்து வீடு திரும்பும் போது அவர் துணையை, அவர் களைப்புற்று இருந்தாலும் கூட நான் விரும்புகிறேன்.

எனது தாய் வருத்தமுற்று மனமுடைந்து இருக்கும்போது என்மீது எரிந்து விழாமல் அல்லது அசட்டையாக (கவனிக்காதிருக்க) இருக்கக்கூடாது.

என் குடும்பத்தினர் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு அவ்வப்பொழுது என்னிடம் சிறிது நேரம் செலவழிக்க விரும்புகிறேன்.

ஓ! இறைவா நான் அதிகப்படியாக எதையும் உங்களிடம் கேட்க விரும்பவில்லை. என் குடும்பத்தினர் அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கும் தொலைக்காட்சி பெட்டியைப் போல வாழ விரும்புகிறேன். அவ்வளவே!

கட்டுரையைப் படித்த பிறகு கணவர் கூறினார்: பாவம் அந்த குழந்தை, என்ன மோசமான, கொடூரமான பெற்றோர், உடனே மனைவி அவரின் தலையை நிமிர்த்தி அவரிடம் கூறினார் அந்த கட்டுரை நம் மகனுடையது.. இன்று இவ்வாறு தான் உள்ளது உலகம்.

**தான் என்ற எண்ணத்தை உதிர்த்து தன் முனைப்பை விரட்டி**
**உடலழகைக் கடந்து உண்மையாக உள்மையத்தை கண்டு**
**சாவையும் சமமாக ஏற்றுக்கொண்டு நொடிப்பொழுதனைத்தையும்**
**மகிழச்சியாகக் களித்து வெளியேயின்றி உள்ளே தேடும்**
**பாடத்தை கற்றவரே ஆன்மீக வாழ்க்கை வாழத்தெரிந்தவர்**



# சேவை செய்தி

## நற்பண்புகள் மற்றும் ஆன்மீகம் - பாடத்திட்டத்தின் துவக்கம்

### புழல் மத்திய சிறைச்சாலை - சென்னை

பிரம்மா குமாரிகள், நற்பண்புகள் கல்வித் துறையின் ஒரு பிரிவின் மூலம் நற்பண்புகள் மற்றும் ஆன்மீக பாடத் திட்டத்தை புழல் மத்திய சிறைச்சாலை (சிறைச்சாலை-1) சென்னையில் துவக்கி யுள்ளது. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்படும் இப்பாடத்திட்டத்தில் 18 ஆயுள் கைதிகள் நற்பண்பு கல்வியின் பட்டயப் படிப்பிலும், பட்டப்படிப்பிலும் 2013-2014-ம் கல்வி ஆண்டில் சேர்ந்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியை கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் திரு. திருபாதி அவர்களின் ஆணையின்படி தமிழக சிறைச்சாலையில் இக்கல்வித் திட்டத்தை நடத்த உத்தரவிடப்பட்டு சிறை கண்காணிப்பாளர் திரு. பரமேஸ்வரன், மூத்த சகோதரி பி.கு. கலாவதிஜி, பி.கு. சுவாதி, பி.கு. ஜான்சி, பி.கு.இரஞ்சனி ஆகியோர் 28-மார்ச் 2013 அன்று கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.

14 ஆயுள் கைதிகள் நற்பண்பு கல்வியின் பட்டயப்படிப்பாலும், 4 ஆயுள் கைதிகள் பட்டப்படிப்பில் சேர்ந்திருந்தவர் களுக்கு பாடப்பத்தகம் துவக்கவிழாவில் வழங்கப்பட்டு, அதே நாளில் PCP வகுப்புகள் துவங்கியுள்ளது. முறையாக 5 நாட்கள் Diploma பட்டயப்படிப் பிற்கான PCP வகுப்பும், 10 நாட்கள் PG Diploma பட்டயப்படிப்பிற்கான PCP வகுப்புகளின் தொடர்ச்சியாக 7 நாட்கள் இராஜயோக தியான வகுப்புகளும் நடத்தப்பட்டு அவர்கள் தினசரி வகுப்பிலும் கலந்து கொண்டு பயன் அடைந்து கொண்டு வருகின்றனர்.

இப்படிப்பிற்காக அண்ணாமலை பல்கலைக்கழகம் படிப்பிற்கான கட்டணம் ஏதும் இல்லாமல் Fees Free செய்து ஆயுள் கைதி களுக்கு உதவி செய்துள்ளது.

ஆயுள் கைதிகளின் நடைமுறை மாற்றத்தினை அங்கு வரும் V.I.P. பெரிதும் பாராட்டி செல்கின்றனர். அவர்களுடைய வாழ்வில் நற்பண்புகளின் மாற்றத்தை கொண்டு வருவது பெரும் உதவி புரிவதாக ஆயுள் கைதிகளும் தங்களது அனுபவத்தை எடுத்துரைக்கிறார்கள்.

சிறைச்சாலை வளாகத்தில் தியான அறையும், தினசரி முரளி வகுப்புகள் நடைபெறுவதால் தனிப்பட்ட மாற்றத்திற்கு அவர்களுக்கு மிகவும் ஏதுவாக உள்ளது.

பிரம்மா குமாரிகள் கல்விப்பிரிவின் நற்பண்புகள் மற்றும் ஆன்மீக பாடத்திட்டத் தின் சேவைகளானது குஜராத் மாநிலம், சமர்மதி சிறைச்சாலையிலும், டெல்லி திகார் சிறைச்சாலைகளிலும் கடந்த சில வருடங் களாக நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகர பிரமுகர்களும் இச்சேவையை பெரிதும் பாராட்டுகின்றனர்.




# வெளி நாட்டில் ஈஸ்வரிய சேவையின் துவக்கம்

சென்ற இதழின் தொடர்ச்சி

**(பிப்ரவரி 2013 மாத ஞானமிர்த இதழ் - பி.கே. ரமேஷ் ஷா, மும்பை அவர்களின் கட்டுரையின் தமிழாக்கம்)**
**- பி.கு. உமா, சென்னை**

நான் (ரமேஷ் சகோதரர்) மற்றும் உஷா, ஹோனலூலுவிலிருந்து ஜப்பான் சென்றோம், அங்கு டோக்கியோவில் ஒரு அமெரிக்க யோகியின் இருப்பிடத்தில் தங்கியிருந்தோம். அவரது அறிமுகம் ஏற்கனவே அவோஸ்டிங் ரிட்ரீட்டில் ஏற்பட்டிருந்தது. அவர், அங்கு யோகா கற்று கொடுத்துக் கொண்டிருந்தார். அவருக்கு நாங்கள் சிவபாபாவின் அறிமுகத்தை கொடுத்தோம். அவருடைய ஜப்பானிய மனைவி, ஜப்பானின் முக்கிய தர்மமான, ஷிண்டோவின் முக்கிய பிரிவினுடைய பொறுப்பை வகிப்பவரின் உடன் சேர்ந்து காரியங்களை செய்து கொண்டிருந்தார். எனவே இந்த காரணத்தினால் நாங்கள் ஷிண்டோ தர்மத்தின் அந்த கிளைக்கு செல்ல வேண்டியிருந்தது. அவர்களிடம் இமாலயத்திலிருந்து கொண்டு வந்த ஒரு கல் இருக்கின்றது. அதன் மூலமாக அவர்களுக்கு செய்திகள் கிடைக்கின்றது என்பது தெரிய வந்தது. உங்களுக்கும் அதை காண்பிக் கின்றோம் என்று அவர்கள் சொன்னார்கள். பிறகு அவர்கள் ஒரு பெரிய தட்டையான தாம்பாளத்தை எடுத்து அதற்குள் அந்த கல்லை வைத்தார்கள், பிறகு அதன் நாலாபுறமும் மலர்-மாலை போன்றவற்றை வைத்தார்கள் அதனது நிறம் வெண்மையாக இருந்தது. ஆனால், உருவம் முற்றிலும் சிவலிங்கத்தை போலவே இருந்தது. நாங்கள் கூட சந்தன மாலையை அதன் மீது வைத்தோம், தாம்பாளத்தின் நாலாபுறமும் நாங்கள் சீரான முறையில் சுற்றி வரிசையில் அமர்ந்தோம். இசை ஒலித்துக் கொண்டிருந்தது மற்றும் அதிலிருந்து இரண்டு சகோதரிகள் தியானத்தில் (டிரான்ஸ்) சென்று விட்டார்கள். பதினைந்திலிருந்து இருபது நிமிடங்கள் வரை அவர்கள் டிரான்ஸில் (தியானத்தில்) இருந்தார்கள். உஷாஜி கூட பாதி டிரான்ஸில் சென்றார்கள். இந்த இயக்கத்துடன் சேர்ந்து காரியங்களை செய்யுங்கள் என்பது தான் இன்று அன்பான பாப்தாதாவின் செய்தி என்று அவர்கள் எனக்கு சொன்னார்கள் அபுவில் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் செய்யுங்கள், அதில் இந்த இயக்கத்தின் முக்கிய சகோதரிகளுக்கு அழைப்பு விடுங்கள் என்று எந்த ஒரு கட்டளையை சிவபாபா எங்களுக்கு கொடுத்தாரோ, அதே போன்ற கட்டளை. அந்த கல்லிடமிருந்து அந்த சகோரிகளுக்கும் கிடைத்தது. பாரதத்திலிருந்து வந்திருக்கக் கூடிய இந்த இரு விருந்தாளிகளும் எனது குழந்தைகள், உங்களுடைய இயக்கம் ஜப்பானில் முதன்மையான இயக்கமாக வேண்டும் மற்றும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றால் இவர்கள் உங்களுக்கு என்ன சொல்கின்றார்களோ அதை நீங்கள் உங்களுடையதாக ஆக்கிக் கொண்டால் உங்களது லட்சியம் பூர்த்தி அடைந்து விடும்.

பாபாவிடமிருந்து கிடைத்த செய்தியின் ஆதாரத்தில் நாங்கள் அவர்களிடம் சொன்னோம், நாம் அபுவில் யோகா மாநாடு ஏற்பாடு செய்யலாம். மதுபனிலிருந்து நாள் குறித்தபிறகு உங்களுக்கு சொல்கின்றோம். இந்த விதத்தில்

அவர்களுக்கு அபுவிற்கு வருவதற்கான அழைப்பு கொடுக்கப்பட்டது.

அவர்களது விசயங்களை கேட்கும் போது, கல்ப விருட்சத்தின் அனைத்து தர்மங்களின் கிளைகளினுடைய சதோபிரதானமான நிலையின் நிர்மாணத்தை (உருவாக்குவது) சிவபாபா தான் செய்விக்கிறார், என்பது புரிந்தது. எவ்வாறு ஒவ்வொரு கிளையின் தொடர்பும் தண்டுடன் (அடிமரத்துடன்) இருப்பதை போல. அதே விதத்தில் அவர்களது தொடர்பும் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்துடன் இணைந்து அந்த இயக்கத்தின் தலைமை பொறுப்பில் இருப்பவர் மிகவும் வயதானவராக இருந்தார். இருந்தாலும் கூட இமாலய கல்லிடம் இருந்து கிடைத்த செய்தி மற்றும் ஈஸ்வரிய அழைப்பின் ஆதாரத்தினால் அவர் பாரதத்திற்கு வந்தார். மும்பையிலும் கூட இருந்தார். அங்கு கூட அவர் மூலமாக ஈஸ்வரிய சேவை நடை பெற்றது. மவுண்ட் அபுவில் ஏழு நாள் இருந்தார் மற்றும் யோகத்திற்கான மாநாட்டிலும் கலந்து கொண்டார். மிக அதிக நேரம் பாபாவின் அறையில் யோக பயிற்சி செய்து கொண்டிருந்தார். அவர்களது இயக்கமான ஷிண்டோ தர்மத்தின் முக்கியமான பிரச்சாரம் செய்யக்கூடியவராக வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருந்தது. அதற்காகவே முயற்சி செய்து கொண்டிருந்தார். சிவபாபா, குறிப்பாக பிராமண, தேவதை மற்றும் க்ஷத்திரிய தர்மத்தின் ஸ்தாபனையை மட்டும் தான் சங்கமயுகத்தில் செய்கிறார் என்றில்லை. கூடவே அனைத்து தர்மங்களின் மிகவும் உயர்ந்தது சதோபிரதானமான நிலையை உருவாக்குவதைக் கூட சங்கமயுகத்தில் தான் செய்கின்றார். மற்றும் சிவதந்தைதான் அனைத்து தர்மங்களுக்கும் தந்தையாக இருக்கின்றார், என்ற விசயங்களை சிவபாபா எங்களுக்கு அனுபவம் செய்வித்தார். நாங்கள் ஜப்பானில் நான்கு நாட்கள் இருந்தோம், நன்றாக ஞானத்தை பற்றிய கலந்துரையாடலும் நடந்தது. நமது புத்தகங்களையும் அவர்களுக்கு கொடுத்தோம். ஜப்பானில் தாவோ என்ற தர்மத்தின் இயக்கத்திற்கு கூட நாங்கள் சென்றிருந்தோம். அதன் பெயர் மிகவும் பிரபலமடைந்திருந்தது. லட்சக்கணக்கானோர் அதை பின்பற்றக் கூடியவர்களாக இருந்தனர். நாங்கள் அவர்களுக்கு பரமாத்மாவின் அறிமுகத்தை கொடுத்தோம் அதனது காரிய தரிசிகள் சொன்னார்கள், நீங்கள் என்ன ஞானம் கொடுக்கின்றீர்களோ, அதே ஞானம் தான் எங்களிடமும் உள்ளது. நீங்கள் பரமாத்மா பிந்து ரூபமானவர் என்று சொல்கின்றீர்கள். பரமாத்மா பிந்து ரூபமானவர் என்று எங்களுக்கும் தெரியும். எங்களது இயக்கத்தை பரமாத்மா தான் ஸ்தாபனை செய்தார் என்று அவர்கள் அதைப்பற்றி விஸ்தாரமாக சொன்னார்கள். எங்களது சகோதரிகள் டிரான்ஸில் (தியானத்தின் மூலம் காட்சிகள் காண்பது) சென்று அனுபவம் செய்து கொண்டு வருகின்றார்கள். நாங்கள் ஒரு மிகப்பெரிய வெள்ளைத் துணி வைக்கின்றோம், அதில் கருப்பு நிற பிரஷ்ஷினால் சகோதரிகள் செய்திகளை எழுதுவார்கள். அதனுடைய ஆதாரத்தினால் இயக்கத்தின் காரியங்கள் நடக்கின்றது. ஒரு முறை நாங்கள், எங்களுக்கு செய்தியை அளிக்கும் நீங்கள் யார்? உங்களது சொரூபம் என்ன? எங்களுக்கு (படம்) போட்டோ தேவை, என்று கேள்வி கேட்டோம். அப்பொழுது அந்த செய்தி அளிக்கும் சகோதரி (சந்தேஷி) மூலமாக வெண்ணிற துணியில் எழுதப்பட்ட செய்தி கிடைத்தது, அதாவது நீங்கள் ஒரு இடத்திற்கு செல்லுங்கள், அங்கு சென்று எனது படத்தை (போட்டோ) பிடியுங்கள், நான் அங்கு ஆஜராகியிருப்பேன் அந்த செய்தியில் சொல்லப்பட்ட இடத்திற்கு நாங்கள் கேமரா போன்றவற்றை எடுத்துக் கொண்டு சென்றடைந்தோம். கூடவே பரமாத்மா இப்பொழுது வருவார் என்று காத்துக் கொண்டிருந்தோம், ஆனால் பரமாத்மா வரவே இல்லை. நாங்கள் நம்பிக்கை இழந்து திரும்பி

வந்து விட்டோம். சகோதரிக்கு செய்தியளித்து மீண்டும் டிரான்சில் அனுப்பினோம். அதாவது, பரமாத்மாவாகிய நீங்கள் வரவில்லை. எனவே நாங்கள் திரும்ப வந்துவிட்டோம் என்று. நான் அந்த இடத்திற்கு வந்தேன். ஆனால் நீங்கள் என்னை படமெடுக்கவில்லை. நீங்கள் படம் பிடித்திருந்தால் அவசியம் படம் வந்திருக்கும். நீங்கள் மீண்டும் அந்த இடத்திற்கு செல்லுங்கள் நான் திரும்பவும் வருவேன். இந்த முறை அவசியம் என்னை படம் பிடிக்க வேண்டும் என்று பதில் வந்தது. நாங்கள் உடனே அந்த இடத்தை சென்றடைந்தோம். யாரும் தென்படவில்லை. ஆனால் குறிப்பிட்ட நேரத்திற்கு நாங்கள் கேமராவின் திரையை அழுத்தி விட்டோம். திரும்ப வந்து படத்தை பாஸிடிவ் செய்த போது எதுவுமே வரவில்லை. உங்களது படம் வரவில்லை என்று மீண்டும் செய்தி அனுப்பினோம். பெரிய படமாக எடுங்கள் என்று செய்தி கிடைத்தது. பெரியதாக எடுத்தோம் ஆனால் எதுவும் தென்படவில்லை. மீண்டும் செய்தி அனுப்பினோம். அப்போது 6 அடி க்கு 6 அடி அளவில் பெரிய படமாக எடுங்கள் என்று செய்தி கிடைத்தது. நாங்களும் அவ்வாறே செய்தோம், அப்போது ஒரு கருப்பு புள்ளி தென்பட்டது. இதில் எந்த ஒரு முகமும் தென்படவில்லையே, ஒரே ஒரு கருப்பு புள்ளி தான் தென்படுகிறது என்று செய்தி அனுப்பினோம், அப்பொழுது, எனது சொரூபம் அதுதான், எனக்கு மனிதர்களைப் போன்ற உருவம் இல்லை. எனவே கண்களுக்கு புலப்படுவதில்லை. பிந்து ரூபமாகிய, பரமாத்மா நான் தான் உங்களுக்கு வழி காண்பிக்கின்றேன், என்று செய்தி வந்தது. இந்த விதத்தில் அவர்களது இயக்கத்தின் வரலாற்றை கூறினார்கள்.

அந்த நாள் அமிருதவேளை யோகத்தில் பாபா உஷாஜிக்கு இதை தான் கூறியுள்ளார், நீங்கள் அங்கு சென்றீர்கள் என்றால் அங்கு தாவோ தர்மத்தின் முக்கியமானவருடன் சந்தித்து பேசுவீர்கள். எனது தெய்வீக காரியத்தின் அனுபவமும் ஏற்படும். அங்கு அவர்களின் வாயினால் பரமாத்மாவின் புள்ளி ரூப சொரூபத்தின் விசயத்தை கேட்டு எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பிறகு அவர்களது பெரிய சபையில் உஷாஜி மற்றும் நான் ஈஸ்வரிய சேவையின் சத்திய நோக்கம் பற்றி எடுத்துரைத் தோம். உங்களுக்கு முன்னால் பரமாத்மாவின் பிந்து சொரூபத்தின் ஞானம் இருக்கின்றது மற்றும் பரமாத்மாவின் தெய்வீக அவதாரத்தின் காரியம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றியும் கூறினோம். இந்த காரணத்தினால் உங்களுக்கு முன்னால் ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அதாவது நீங்கள் பிந்து சொரூப ஞானத்தை புரிந்து கொண்டு பரமாத்மா மூலமாக கொடுக்கப்பட்ட ஈஸ்வரிய ஞானத்தை தாரணை செய்வதற்கான முயற்சி செய்வீர்கள் என்றால், பரமாத்மா மூலமாக படைக்கப்படும் புதிய உலகில் உயர்ந்த பதவியை அடைய முடியும். இரண்டாவது வாய்ப்பு இது தான். ஒருவேளை நீங்கள் பரமாத்மாவின் உண்மையான அறிமுகத்தை அடைந்த பிறகும் கூட உங்களது தர்மம் மற்றும் அதனது சிந்தனைகளில் உறுதியாக இருந்தால் புதிய கல்பத்தில் எப்பொழுது உங்களது தர்மம் ஸ்தாபனையாகுமோ, அதில் உங்களுக்கு உயர்ந்த பதவி கிடைக்கும் இந்த விதத்தில் உங்களுக்கு முன்னால் தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு வாய்ப்புகள் உள்ளன. ஒன்றிரண்டு நாட்கள் அதிகமான கலந்துரையாடல்கள் நடந்தன. அவர்களது சிந்தனைகளில் அவர்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றனர் என்பதை நாங்கள் அனுபவம் செய்தோம். பிரம்மா குமாரிகளின் ஞானத்தினால், நமது சகோதரிகள் மூலமாக கிடைக்கும் செய்திகள் சத்தியமானவை என்பது தெளிவாகிறது என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள் மற்றும் அவர்கள் அவர்களது தர்மத்தில் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தி வைத்துக் கொண்டார்கள். இந்த விதத்தில்

சிவபாபா எங்களுக்கு ஜப்பானின் ஷிண்டோ தர்மம் மற்றும் தாவோ தர்மத்தின் ஸ்தாபனைக்கான காரியம் வரக்கூடிய கல்பத்தில் எப்படி இருக்கும். அவர்களது தொடர்பு நமது விஷ்வ வித்தியாலயத்துடன் எப்படி இருக்கும் இதன் அனுபவத்தை செய்வித்தார்.

நான் புரிந்து கொள்கின்றேன். நமது மற்ற சகோதர, சகோதரிகளின் அனுபவம் கூட இப்படித்தான் இருக்கும் சிவபாபா அப்படி அந்நிய தர்மங்களின் ஸ்தாபனையில் தனது தெய்வீக காரியத்தை செய்கின்றார். பரமாத்மாவின் இந்த தெய்வீக காரியத்தை புரிந்து கொள்வதன் மூலமாக கல்ப விருட்ச சித்திரத்தின் உண்மையான ரகசியம் என்ன என்பது தெரியவருகிறது. அனைத்து தர்மங்களின் சகோதர, சகோதரிகள் நமது கல்ப விருச்ட்சத்துடன் இணைந்து உள்ளார்கள். நாம் அனைவரும் ஒரு தந்தையின் குழந்தைகள் என்பதும் இந்த விதத்தில் புரிய வருகிறது. இந்த முறையில் மதவேறுபாடுகள் அனைத்தும் விலகிவிடும் மற்றும் சத்யுகத்தில் ஒரு சத்தியமான தர்மத்தின் ஸ்தாபனை ஏற்படும்.

ஜப்பானின் இந்த இரண்டு இயக்கங்களின் அனுபவத்தினால் பரமாத்மாவின் மற்றொரு தெய்வீக காரியத்தின் விசேஷ அனுபவம் ஏற்பட்டது. பரமாத்மாவை திவ்ய திருஷ்டி அளிக்கும் வள்ளல் என்று சொல்லப்படுகிறது. அதனுடைய விளைவாக அன்பான பிரம்மா பாபாவிற்கு முதன் முதலில் அழிவு மற்றும் ஸ்தாபனைக்கான காட்சி தென்பட்டது. மற்றும் உலக மாற்றத்திற்கான பொறுப்பை நீங்கள் தான் எடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. ஜப்பானில் இருக்க கூடிய இரண்டு இயக்கங்களுக்கு கூட திவ்ய திருஷ்டி மூலமாக சிவபிதா பரமாத்மாவின் சொரூபம் மற்றும் புதிய உலக ஸ்தாபனைக்கான விதியைப் பற்றிய ஞானம் கிடைத்தது. கீதையில் கூட மகா வாக்கியம் எழுதப்பட்டுள்ளது. திவ்ய திருஷ்டியின் வள்ளல் நான் தான் மற்றும் அந்த திவ்ய திருஷ்டியின் ஆதாரத்தினால் தான் பதினோராவது அத்தியாயத்தில் அர்ஜீனனுக்கு விராட ரூபத்தின் காட்சியும் கிடைத்தது. ஜப்பானில் உள்ள இயக்கங்களுக்கும் நமது இயக்கத்திற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. நமது விஷ்வ வித்யாலயத்தில் சிவ தந்தை அவரே அவதரித்து பிரம்மாவின் வாய்மூலமாக மற்றும் குல்ஜார் தாதியின் வாய் மூலமாக ஞானத்தை அளிக்கின்றார். மற்றும் குழந்தைகளாகிய நம்மை தத்தெடுத்து சொர்க்கத்தின் ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குகின்றார். இந்த விதத்தில் நமது தொடர்பு பரமாத்மாவுடன் நேரடியாக இருக்கின்றது. ஜப்பானில் உள்ள இயக்கங்களுக்கு பரமாத்மா, திவ்ய திருஷ்டி மூலமாக அல்லது இமய மலையின் கல் மூலமாகவோ அல்லது நீளமான துணியின் மீது பிரஷ்ஷினால் எழுதப்பட்ட வார்த்தைகளின் மூலமாக தனது அறிமுகத்தை கொடுக்கின்றார் என்றால் அங்கெல்லாம் பரமாத்மாவின் திவ்ய அவதாரம் ஏற்படுவ தில்லை. ஆனால் செய்தியளிக்கும் சகோதரிகள் மூலமாக சந்தேஷி தனது காரியத்தை செய்கின்றார். மற்றும் அந்த செய்தியாளர்கள் மூலமாக நிமித்தமான ஆத்மாக்களுக்கு துவாபரயுகத்திற்கு பிறகு இந்த உலகம் எனும் வண்ணமயமான மேடையில் தங்களது தர்மத்தின் பொன்னான நிலையில் வருவதற்கான சௌபாக்கியம் கிடைக்கின்றது. ஆனால் சிருஷ்டியின் ஆரம்ப நிலையிலேயே நாம் சிருஷ்டியின் நாடகமேடைக்கு வந்து விடு கிறோம். நாம் பக்தியிலிருந்து முழுவதுமாக துறவு பெற்று விடுகிறோம். மற்றும் நமக்கு ஈஸ்வரிய ஞானத்தின் தெளிவு நிலை கிடைக்கின்றது. இந்த இரண்டு இயக்கங்களிலும் பக்தியிலிருந்து முழுவதுமாக விலகுவதில்லை. எனவே அந்த காரணத்தினால் அங்கு ஈஸ்வரிய ஞானத்தின் தெளிவானது ஏற்படுவதில்லை. எனவே அந்த அனைத்து ஆத்மாக்களும் துவாபரயுகத்திற்கு பிறகு எப்பொழுது பக்தி ஆரம்பமாகிறதோ அப்பொழுதுதான் இந்த

உலகம் எனும் வண்ணமயமான நாடக மேடைக்கு வருகின்றனர்.

இந்த விதத்தில் பார்க்கும் பொழுது பாபா எங்களிருவர் மூலமாக உலகிலுள்ள தர்மஸ்தாபனையாளர்களுக்கு தனது சொரூபத்தின் அறிமுகத்தை அளித்தார். வேறு ஏதாவது இயக்கங்களில் இந்த மாதிரி அனுபவம் ஏற்பட்டால் எங்களுக்கு எழுதி அனுப்புமாறு வேண்டி கொள்கிறேன். இதன் மூலமாக சிவபாபா அனைத்து தர்மங்களின் ஸ்தாபனையாளராக எவ்வாறு உள்ளார் என்பதை நிரூபித்து சிவபாபாவை அனைவரையும் விட உயர்ந்த தர்மஸ்தாபனையாளர் என்ற ரூபத்தில் வெளிபடுத்த முடியும். இப்பொழுது ஜப்பான், சைனா (சீனா) வில் ஈஸ்வரிய சேவைகள் ஆரம்பமாகி விட்டது. பாபாவின் மறைந்து இருக்கும் அநேக இரத்தினங்கள், யார் சத்யுகத்திலிருந்து உலகம் எனும் நாடகத்தில் வருவார்களோ, அவர்களெல்லாம் அங்கிருந்து வெளிபட்டு வருவார்கள்.

## என்ன லாபம்?... *(எழுதியவர் சகோதரி பி.கு. மாலா, நாகர்கோவில்)*



வாழ்ந்தாலும் பாபாவுடன் நான் வாழ வேண்டும்
இல்லையென்றால் வாழ்ந்து என்ன லாபம்

கற்றாலும் இராஜயோகா நான் கற்க வேண்டும்
இல்லையென்றால் எந்த யோகா கற்றும் என்ன லாபம்

பெற்றாலும் சிவதந்தையை தாய் தந்தையாய் நான் பெற வேண்டும்
இல்லையென்றால் மற்றதெல்லாம் பெற்றும் என்ன லாபம்

நினைத்தாலும் பாபாவை நான் நினைக்க வேண்டும்
இல்லையென்றால் வேறு எதை நினைத்தும் என்ன லாபம்

மாற்றம் அடைந்தாலும் பிரம்மாவைப் போல் நான் மாற வேண்டும்
இல்லையென்றால் எந்த மாற்றம் அடைந்தும் என்ன லாபம்

வழி நடந்தாலும் பாபாவின் ஸ்ரீமத் வழி நடக்க வேண்டும்
இல்லையென்றால் எந்த வழி நடந்தாலும் என்ன லாபம்

சாப்பிட்டாலும் பிரம்மா போஜனம் நான் சாப்பிட வேண்டும்
இல்லையென்றால் எல்லாம் சாப்பிட்டும் என்ன லாபம்

பிறவி எடுத்தாலும் சங்கமயுகத்தில் பிறவி எடுக்க வேண்டும்
இல்லையென்றால் இந்த பிறவி எடுத்தும் என்ன லாபம்

கண்விழித்தாலும் அமிர்த வேளையில் கண் விழித்தல் வேண்டும்
இல்லையென்றால் கண் விழித்து என்ன லாபம்

உணர்ந்தாலும் ஆத்மாவாக நான் உணர வேண்டும்
இல்லையென்றால் தேகத்தை உணர்ந்து என்ன லாபம்

பார்த்தாலும் பரந்தாமத்தை நான் பார்க்க வேண்டும்
இல்லையென்றால் வேறுயெல்லாம் பார்த்து என்ன லாபம்.

# மகளிர் சக்தி

பி.கு. சுவாதி, சென்னை



ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாக அனுசரித்து மகளிரை புகழ் பாடி கௌரவிக்கிறோம். இது ஒரு நல்ல சகுனமே.

தாய் திருநாடாம் பாரத நாட்டில் பெரும்பாலும் பெண்களை கோவிலில் தேவிகளாக வழிபடும் பழக்கமானது இருந்து வருகிறது, மேலும் பெண்களையே மகாசக்தி எனவும் புகழ்பாடுகிறார்கள். இவ்வாறு அநேக பெருமைகள் இருப்பினும் கூட இந்தியாவின் 64-வது குடியரசு தினத்தை சமீபத்தில் கொண்டாடி முடித்திருந்த போதிலும் பெண்களுக்கான உரிமைக்காக இன்றளவும் கூட போராடும் நிலை தான் என்றால் அது மிகையாகாது.

சமூக ஆர்வலர்கள் பெண்ணின் பெருமையை காக்கவும் அவர்களுடைய உரிமையை பெற்றுத் தரவும் முயன்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஏனென்றால் ஆண் பிள்ளைகளை போல பெண் குழந்தைகளும் கூட சமுதாயத்தில் முக்கியமானவர்களாய் இருக்கிறார் கள் என்ற விழிப்புணர்வு பரவலாகிக் கொண்டே யிருக்கிறது.

### சமுதாயத்தில் பெண்களின் நிலை :

முந்தைய காலத்தில் ஆண்களை அதிகார வர்க்கமாகவும் அதற்கு மாறாக பெண்களை அடிமைத்தனமாக வைத்திருந்த காலமும் உண்டு.

ஆன்மீகம் மேலும் மதரீதியான விசயங் களில் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். நாடு சுதந்திர மடைந்த பின்பும் பல இடங்களில் இன்றளவிலும் கூட உடல் ரீதியான வன்முறை (டொமஸ்டிக் வயலன்ஸ்) மொழி, இனம், ஜாதி வேறுபாடு இல்லாமல் அனைத்து தரப்பிலும் இருக்கத்தான் செய்கிறது. பெண் சிசு கொலை என்பது வெகு காலத்திலிருந்து இன்றும் கூட ஒரு பகுதியில் வெளிப்படையாகவும், மறைமுக மாகவும் அரங்கேறிக் கொண்டே தான் உள்ளது, மேலும் இளம் வயது திருமணமும், நெருங்கிய உறவில் திருமணம் செய்வது கிராமப்புறங்களில் காணப்படுகிறது. பல இடங்களில் அவர்களுக் கான உரிமைகளும், கல்வியும் கூட மறுக்கப் படுவது தெரிகிறது.

ஊடகங்கள் மகளிர் வல்லமையை எதிர் மறையாக சித்தரித்து விடுவதால் பெண்களின் உண்மையான பண்பு நலன்களான அன்பு, அரவணைத்தல், தியாகம் இவையாவும் மறைத்து விடப்படுகிறது.

அனேக அறிவியல் ரீதியான முன்னேற்றம் கண்டிருப்பினும் 1.3 கோடி மக்கள் தொகையில் பெரும் பஞ்சத்தில் பாதிக்கப்பட்டவர்களில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெண்களும் மற்றும் இளம் பெண்கள் தான், இதனை சிலர் 70 சதவீதம் பெண்கள் ஜனத்தொகையாக இருக்கக்கூடும் என நம்புகிறார்கள். 60 மில்லி யன் இந்தியர்கள் வறுமை கோட்டின் கீழ் தான் உள்ளனர் என கூறப்படுகிறது. கிராமப்புறங்களில் போதுமான மருத்துவ வசதி இல்லாத காரணங் களினால் 15-45 வயதுக்கு உட்பட்டிருக்கும் பெண்களில் 12.5 சதவீதம் இறப்பு வீகிதமாக உள்ளது. இளம் பெண்களின்

இறப்பு விகிதமானது வாலிபர்களின் இறப்பு விகிதத்தை விட 1.3 சதவீதமாக வருடத்திற்கு வருடம் அதிகரித்து வருகிறது. பெண்கள் வரதட்சணைக் காக துன்புறுத்தப்பட்டு மரணமடையும் போது அவர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது மட்டுமல்லாது அவர்களுடைய வாழ்வதற்கான உரிமையும் கூட பறிக்கப்படுகிறது என்றே கூறலாம். அரசு புள்ளி விபரமானது 1999-2001ல் 6347 பெண்கள் நெருப்பினால் வரதட்சணைக்காக கொல்லப்பட்டுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

1993-ம் ஆண்டு மனித உரிமைக்கான உலக சம்மேளனத்தில் முதல் முறையாக பெண்கள் உரிமை பற்றி பேசப்பட்டது. இதற்கு நாம் நன்றி கூறவே கடமைப்பட்டுள்ளோம், ஏனெனில் உடல் ரீதியான வன்முறையானது மறைவாக இருந்தது, இதன் வாயிலாக வெளிச் சத்திற்கு கொண்டு வரப்பட்டது. இவையாவும் ஒருபுறம் இருந்த போதிலும் கூட, பெண்ணாக பிறந்திருப்பதால் துன்பப்படத்தான் வேண்டும் மேலும் தங்களுடைய வாழ்க்கையில் சுய விருப்பம் என்பது இருக்கக் கூடாது என்ற எண்ணம் அவர்களுக்குள்ளேயே இருக்கிறது என்பது சற்று வருத்தம் அளிக்கும் விசயமாகத் தான் உள்ளது.

### பெண்ணின் பெருமை :

ஆண்களைப் போலவே பெண்களின் பங்கும் சமுதாய முன்னேற்றத்தில் இன்றியமை யாதது தான். அவர்களுடைய உழைப்பும், முயற்சியும் கூட நல்லதொரு சமுதாய சூழலை உருவாக்குவதில் திறன் சேர்க்கிறது. ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் மேலும் ஆன்மீக ரீதியாக வும் வளர்ப்பது தாயாக இருப்பினும் கூட பெண் களுக்கு சமுதாயத்தில் இரண்டாம் நிலைக் கான அந்தஸ்து தான் கிட்டியுள்ளது. இந்தியாவில் பெண்களை பொதுவாக உடல் ரீதியாக பலவீன முள்ளவர்களாகவும், நம்பகத்தன்மை குறைந்தவர் களாகவும், பொருளாதார ரீதியாக சுமையாகவும் மேலும் அறிவு சார் விசயங்களில் போட்டியிட இயலாதவர்கள் என்ற கருத்து இருந்த நேரமும் உண்டு, ஆனால் அந்நிலையானது மாறி பல்துறைகளில் வெற்றிக் கொடியை நாட்டி வருகிறார்கள் என்பதை கண்கூடாக பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஒரு தாய் தான் குழந்தையின் முதல் குரு, எப்பெண் ஆற்றல் நிறைந்தவராக இருக்கிறாரோ அவர் தன்னைப் பற்றிய சுய பெருமை தான் இருக்கும்.

நான் ஒரு பெண் நான் ஒரு தாய் என்பதில். மேலும் சமுதாயத்தில் நிலவிய கண்ணோட்டமான பெண் உடல் ரீதியாக பலவீனமானவர்கள், உணர்வு ரீதியாகவும், அறிவு சார் விசயங்களில் சற்று குறைந்தவர்களாகவும் இருந்த நிலையை மாற்றி ஆண்களைப் போல மற்றும் ஆண்களால் செய்ய இயன்ற அனைத்து கடினமான செயல்களையும் செய்ய வல்லவர்கள் என்பதை உணர்ந்திருப்பார்கள். பால் ரீதியான பாகு பாடுகளையும் கூட புத்தி கூர்மையினால் களைந்து தனது பெரும் ஆற்றல்களை வெளிப்படுத்துபவர்களாக இருப்பார்கள். பெண்ணாக பிறந்ததற்கு வருத்தப்படுவது மேலும் ஆண்களைப் போன்ற குணங்களை வெளிப் படுத்த முற்பட மாட்டார்கள், பெண்மையின் உயர் குணத்தையே வெளிப்படுத்துவார்கள்.

### பெண்களும் சுற்றுப்புற சூழலும் :

பெண்கள் வீட்டு அத்தியாவசிய காரியங்களில் 8.73 சதவீதம் மணி நேரம் செலவு செய்கிறார்கள் என ஆராய்ச்சி கூறுகிறது. அவர்களின் தலையாய கடமையாக இருப்பது உணவு சமைத்தல் மேலும் அதனை சார்ந்த குடும்ப கடமைகளில் ஈடுபடுவதுதான். பெண்கள் 10.35 சதவீதம் ஆண்கள் ஈட்டியிருக்கும் அதே வேலையில் குறைவான சம்பளத்தையே பெறுகிறார்கள் என்பது இருந்தது, ஆனால்

இந்நிலையானது சற்று மாற்றம் அடைந்து இன்று கிராமப்புறங்களில் கல்வி கற்பதில் ஆர்வத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இயன்றவரை பொது நிகழ்வுகளிலும் அவர்களுடைய முழு பங்களிப்பையும் அளிக்கிறார்கள். இதன் கண் கூடான உதாரணமாக இருப்பது மகளிர் சுய உதவி குழுக்கள்.

விழிப்புணர்வு என்பது தங்களுடைய பங்களிப்பினால் ஏற்படும் அனுபவத்தினாலும், இயக்கம் சார்ந்த செயல்களினாலேயே ஏற்படக் கூடும் என்பதால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அடிக்கடி கலந்து ஆலோசனைக் கூட்டம் நடத்துவதிலும், அதில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் முனைப்பாக உள்ளது.

இது கிராமப்புற பெண்களின் வாழ்வில் மிகப்பெரிய நேர்மறை மாற்றத்தை கொண்டு வந்துள்ளது என்பது சமுதாயத்தில் யாராலும் மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

### பெண்கள் முன்னேற்றத்தில் ஆன்மீகத்தின் பங்கு :

சமுதாயத்தில் ஒவ்வொருவருடைய பங்களிப்பும் அவசியமானது. அவ்வாறு இல்லையேல் அது ஆரோக்கியமான நிலையாக இருக்க முடியாது. இதனை எப்பொழுது ஒவ்வொருவரும் உணர்கிறார்களோ அப்போது நல்லதொரு உலகத்தை உருவாக்க முடியும்.

ஆகவே தான் பிரம்மா குமாரிகள் அமைப்பானது சுயம் பரமாத்மாவினால் 1936-ஆம் ஆண்டு தாதா லேக்ராஜ் என்ற பெயருடைய (பிரஜா பிதா பிரம்மா) பிரசித்தி பெற்ற ஓர் வைர வியாபாரியின் உடலில் பரகாய பிரவேசம் செய்து சிந்து மகாணத்தில் இருந்த ஹைதராபாத்தில் ஸ்தாபனையான போது, தாய்மார்களே சொர்க்கத்தின் திறவு கோல் மேலும் சுகம், அமைதி, மகிழ்ச்சி நிறைந்த சொர்க்கத்தின் ஸ்தாபனைக்கு அவர்களே ஆதாரமானவர்கள் என்ற உண்மை நிலை உருவாகியது. பிரஜாபிதா பிரம்மா (பாதர் ஆப் யூமேனிட்டி) தான் சம்பாதித்த பெரும் செல்வத்தை தாய்மார்களைத் தலைமையாக கொண்டு ஒரு குழுவினை அமைத்து அதனை உலக நன்மையின் பொருட்டு இறைவனின் காரியத்திற்காக ஒப்படைத்தார். ஏனென்றால் புதிய உலகினை படைக்கும் இறைவனின் செயலில் அவர்களுடைய பங்கு மிகவும் உன்னதமானதாகும்.

### நடைமுறை வழக்கத்தில் கூறுவார்கள் –

இரு பெண்கள் சேர்ந்து இருப்பது கடினமானது என்று. ஆனால் 8500 கிளை நிலையங்களை 140 நாடுகளில் கொண்ட பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயமானது - சகோதரிகளின் நிர்வாகத்தினால் சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது மற்றும் மென்மேலும் வளர்ந்து கொண்டும் உள்ளது. தற்போதைய தலைமை நிர்வாகியாக விளங்கும் தாதி பி.கு ஜானகி தனது 97 வயதிலும் கூட சீரும் சிறப்புமாக நிர்வாகத்தை செய்கிறார்கள் எனும் போது, பெண்களிடம் உள்ள நிர்வாகத் திறமையை எதனுடனும் ஒப்பிட முடியாதவை எனலாம்.

எனவே பெண்களினால் ஒவ்வொரு துறையிலும் தனது நிர்வாகத் திறனையும், புத்தி கூர்மையும், ஆராய்ச்சி ஆற்றலையும் வெளிப் படுத்தி அவர்கள் வகிக்கும் துறையில் வெற்றியை அடைய முடியும் என்பது நிரூபண மாகி யிருக்கிறது.

**பாடுவோமே ! பள்ளு பாடுவோமே !**
**பெண்கள் சமுதாயத்தில் சமநிலை பெற்று**
**விட்டனர் என்று ஆனந்த பள்ளு பாடுவோமே !**

# பயம் என்பது கற்பனையா?

பி.கு. பசுபதி, வேலாண்டிபாளையம், கோயம்பத்தூர்



உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒருவிதமான வகையில் பயம் என்ற உணர்வு சூழ்ந்து இருக்கிறது. பொதுவாக நம் மனதில் பயம் என்ற சொல் கூட ஒருவகை இருள் என்றும் மேலும் அன்பு இல்லாமை கூட ஒரு பயம் என்றே ஞானிகள் கூறுகிறார்கள். பயம் என்பது ஒரு மன நிலை தான். இந்த மனநிலையைக் கட்டுப்படுத்த முடியும். திசை திருப்ப முடியும். தற்போது எதற்கெல்லாம் பயம் கொண்டு வாழ்கிறார்கள் என்பதில் ஒரு வரைமுறையே இல்லாமல் இருக்கிறார்கள். நாம் சாதாரணமாக விலங்கிடம் கூட கற்றுக் கொள்ளும் முதல் பாடமே பயமில்லாமல் இருப்பது. ஒவ்வொரு விலங்கும் தன் உயிருக்கு ஆபத்து வருமோ என்ற நிலையில் தான் பயப்படுகின்றது ஆனால், ஆபத்து நீங்கிப் போய் விட்டால் அதன் பிறகு கவலைப்படாமல் எப்போதும் போல வாழ ஆரம்பித்துவிடுகிறது! இதற்கு எதிர்காலத்தை பற்றியோ, தோல்வி பற்றியோ, வறுமைப்பற்றியோ கண்டு கொள்வதில்லை.

ஒரு சிலர் எதிர்காலத்தை திட்டமிடுகிறார் கள். எதிர்காலத்தை திட்டமிடுவது தவறில்லை... ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்கிற கற்பனையில் பயப்படுவது நிகழ்கால மகிழ்ச்சியை இழந்து விடுகிறோம் என்கிற மனநிலை இல்லாமல் இருக்கிறார்கள்.

### பயத்தை எவ்வாறு வகைப்படுத்துவது?

எல்லாவிதமான பயமும் கீழ்கண்ட முறையில் வகைப்படுத்த முடியும். இவை நம் வாழ்வின் எதிரிகள் போன்று இந்த எதிரிகளை புரிந்து கொண்டால் வாழ்க்கையில் வெற்றி அடைவது எளிது. அவை முதலில்

### எதிர் காலத்தை பற்றிய பயம்:

எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளாமல் குறிக்கோள் இல்லாமல், வறுமையுடன் எதிர் நீச்சல் செய்வதில்லை. இப்படிப் பட்ட நபர்கள், மனதினாலும், உடம்பாலும் சோர்ந்து போய் இருப்பார்கள் மேலும் எதன் மீதும் ஆர்வமும், ஊக்கமும் இல்லாத நிலையில் இருப்பார்கள்.

### இரண்டாவது மற்றவருடன் தன்னை ஒப்பிடுதலினால் ஏற்படும் பயம்:

இது போன்று சூழ்நிலைக் கைதிகளாக உள்ளார்கள். புதிய நபர்களை சந்திப்பதற்கு பயப்படுவது, தன்னுடைய தகுதியினை பிறருடன் ஒப்பிட்டு தாழ்வு மனப்பான்மையை கொண்டு வருவது, வரவுக்கு மீறி செலவு செய்து தன் தகுதியை உயர்த்த முயற்சிப்பது, பிரச்சனைகளை தவிர்ப்பது, குறிக்கோள் இல்லாமல் வாழக்கூடியவராக இருப்பார்கள்

### மூன்றாவதாக உடல் நலம் பற்றிய பயம்:

தன் உடல் பற்றி அடிக்கடி நினைப்பது தனக்கு ஏற்பட்டுள்ளவியாதிகளைப் பற்றிய பயம் கொண்டு வாழ்பவர்களும் உண்டு. உண்மையில் டாக்டரை சந்திப்பவர்கள் 10ல் 7 பேர் தங்களுக்கு நோய் வந்து விட்டது என்கிற கற்பனையிலே இருப்பவர்கள் தான் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தன்னிடம் வியாதிக்கான அடையாளம் இருப்பதாக நினைப்பது. வியாதியைப்பற்றி பேசுவது... மனதை அங்கேயே வைத்திருப்பது... நோய் சம்பந்தமாக செய்தி படிப்பது.... இப்படி ஆகுமோ என்று வேதனையில் பயம் கொணடு

இருப்பவர்களும் பலர் உண்டு.

### நான்காவதாக தனக்கு கிடைக்காத பொருள் மீது பயம்:

இது இருந்தால் நன்றாக இருக்கும், இல்லையென்றால் முடியாது என்ற மன நிலை மனதையும், உடலையும் அழித்து விடக்கூடிய வேதனையாகும். சுய நலத்திற்காக கூறப்படும் பொய்யான விசயங்கள் கூட பயத்தை ஏற்படுத்துகிறது.

### ஐந்தாவதாக தன்னுடைய முதுமையைப் பற்றிய பயம்:

வயதான கால கட்டத்தில் எப்படி சமாளிப்பது. அப்பொழுது என்னால் சுயமாக செயல்பட முடியாது என்ற நினைவு, அந்தளவிற்கு வருமானம் இல்லாத நிலையை நினைப்பது சுற்றி உள்ள சூழ்நிலையை ஒப்பிட்டு வாழ்கிறார்கள். எளிமையாக மனத் தடுமாற்றம் காரணமாக தனக்கு பாதுகாப்பின்மை இருப்பதாக உணர்கிறார்கள்.

மேலும் மரண பயம் கூட இருக்கிறது இந்த பயம் பொதுவாக அனைவருக்குள்ளும் இருப்பது தான் காரணம், இந்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு தன் உடல் மீது தன்னை சார்ந்துள்ள பொருள் மீதுள்ள பற்றுதலே ஆகும்.

### பயத்தினால் ஏற்படும் விளைவுகள்:

பயம் ஒரு எதிர்மறையான மன உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியது. இதன் காரணமாக, மனத் தடுமாற்றம், சுய முடிவெடுக்கும் திறன் குறைந்து விடுகிறது. இது போன்ற பயம் சிறு வயது முதலே குழந்தைகளிடம் ஏற்பட்டு விடுகிறது காரணம் பாதுகாப்பின்மையை அனுபவம் செய்கிறார்கள்.

பயம் கொள்ளும் பொழுது முறையான செயல்கள், மாறுபட்ட சிந்திக்கும் திறனை வெளிப்படுத்துகிறது. இதன் காரணமாக உடல் நடுக்கமும், சுயக்கட்டுப்பாட்டை இழப்பதும், சில சமயங்களில் கண்கள் விரிவதும், சுருங்குவதும், வாய் மற்றும் உதடுகளை சுருக்கி முக பாவனையின் மாற்றமும், உடல் தசைகள் கூட விரைப்பாகி வேர்க்கிறது. சிலர் பதட்டத்தால் மயக்க நிலையையும் அடைந்து சுய நினைவு வைக் கூட இழக்கிறார்கள். இதய துடிப்பும் அதிகரிக்கிறது.

### பயம் நீங்கி வாழ்வது எப்படி?

ஒவ்வொருவருக்குள்ளும் தன்னம்பிக்கை இன்மையே பயத்திற்கு மூலக்காரணம். நம்பிக்கை ஏற்பட அறியாமை காரணம், அறியாமைக்கான மூலகாரணம் மனிதனின் சிந்திகசும் சக்தி பாதிக்கும் பொழுது. ஆகையால் தன்னம்பிக்கை மற்றும் சிந்திக்கும் சக்திகளை அதிகரிக்கும்போது பயம் நீங்கி விடுகிறது.

மேலும் தியானம் என்ற அற்புத கருவியின் மூலம் தன்னம்பிக்கை மற்றும் நேர்மறையாக சிந்திக்கும் திறன் அதிகரிக்கிறது. மேலும் இதுபுதுமை அல்ல. காலம் காலமாக நமது முன்னோர்கள் பழகி வந்த, செய்து வந்த கலை தான் இந்த தியானம். மேலும் நமது பாரத பூமி தான் தியான கலைக்கு பிரதான பூமி என்பது அனைவரின் கருத்து. இதில் முதன்மையான தியானமான இராஜயோக தியானத்தை நாம் நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது பயமற்ற வாழ்க்கை வாழ முடியும் என்பது திண்ணம்.



## அனுபவ செய்தி -
## பி.கு. பாக்கியவதி

ஆன்மீகப் பயணத்தில் எனக்கு கிடைத்த நன்மைகள் பல. நான் எப்போதும் பாபா என் கூடவே இருந்து உதவிகள் செய்வதை அனுபவம் செய்திருக்கிறேன். எனக்குச் சத்திர சிகிச்சை மூன்று நான்கு தடவைகள் லண்டனிலும் நடைபெற்றது, அதற்கு முன்பாக ஸ்ரீலங்காவிலும் நடைபெற்றது. எப்பொழுதும் வைத்திய சாலைக்குச் செல்லும் போது நான் பாபாவுடன் சென்று கொண்டிருக்கிறேன் என சந்தோஷமாக செல்வேன். லௌகீகக் குழ:நதைகள் கவலைப்படுவார்கள். எனக்கு எவ்வித கவலையும் இல்லாமல் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்வார்கள். அந்த நேரத்தில் நான் பாபாவின் நினைவில் இருப்பதால் அவரிடமிருந்து ஒளி (சக்தி) கிடைப்பதை அனுபவம் செய்வதால் ஒருவிதமான போதை ஏற்படும். பாபா! நான் உங்கள் மடியில் படுத்திருக்கிறேன் என்ற எண்ணத்தை தவிர வேறு எதுவுமே எனக்கு இருக்காது. பல மணி நேரங்களுக்குப் பிறகு தான் என்னை நான் உணர்ந்து கொள்வேன். பாபா! முரளிகளில் கூறும் கருத்துக்களை முற்றிலும் உண்மை என உணரக்கூடியதாக இருக்கும். சரீரத்தில் இருந்து பற்றற்ற நிலையையும் ஆத்மா என்ற உணர்வையும் பயிற்சி செய்யக்கூடியதாக இருக்கும். இவ்வாறு நோய் வருவதால் பாபாவை மேலும் மேலும் நினைவு செய்ய வைப்பதுடன் பாபா! ஆன்மீக டாக்டர் என்ற சம்பந்தத்தை அனுபவம் செய்ய வைப்பதுடன் பாபாவின் அருகில் என்னை அழைத்து செல்லவும் உதவுகிறது.

## கடந்த நிலை

குழந்தைகள் இப்போது செய்ய வேண்டிய முயற்சி யெல்லாம், பரமாத்ம தந்தையின் அருகாமையிலேயே இருக்க வேண்டும் என்பதாக இருக்க வேண்டும். ஆதலால், இந்த அனுபவம் செய்வதற்கு ஆத்மாவாகிய நான் தேகத்திலிருந்தாலும், அந்த உணர்விலிருந்து முற்றிலும் விடுபட்டு, அப்பாற்பட்டு, அழிவற்ற உணர்வு பூர்வமான ஆத்மா என்று உணர்ந்த நிலையில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு ஆத்ம உணர்விலேயே நிலைத்திருப்பது அவ்வளவு எளிதாக இல்லை. ஏனெனில் பல மனிதப் பிறவிகள் எடுத்திருக்கின்றோம். பல்வேறு உறவுகளில் சம்மந்தம் கொண்டு விதவிதமான அனுபவம் செய்திருக்கின்றோம். ஆதலால் இவற்றையெல்லாம் மறப்பது சுலபமானதாக இல்லை. புத்தி மூலமாக மறப்பதும், மனதை விடுவித்துக் கொள்வதும் கூட அன்பின் அடிப்படையிலேயே தான் இருக்க வேண்டும். எனினும் இப்போது கடவுளிடம் கொண்டிருக்கும் சம்மந்தத்தின் காரணமாக, பழைய உறவுகளின் நினைவிலிருந்து புத்தி மூலம் விலகி இருக்க முடியும். ஆனால் எப்படி உங்களால் விலகி இருப்பதற்காக, நீங்கள் தந்தையின் உதவியைப் பெற வேண்டும்.



# கவிதை

சகோதரர் சிதம்பரம்,
புழல் மத்திய சிறை, சென்னை

செதுக்கி செதுக்கியே நான் செய்த சிற்பம்
அதிசய ரூபமானதே என்மனமே அதிசிய ரூபமானதே
பதுங்கிய புலிபோல் மறைந்து நின்ற மாசுகள்
தூளாய் கலைந்து போனதே உள்ளமே ஊஞ்சலாடுதே -
சுகத்தில் ஊஞ்சலாடுதே

பொதுவில் நடனமிடும் ஆத்மா எனும் ஜோதியை அழகாய்
கண்டுகொண்டேனே என்னுள் கண்டு கொண்டேனே
எதுவும் எண்ணாமல் ஏகாந்தமாயிருந்தே
ஏற்றம் கொண்டேனே என்னுள் மாற்றம் கண்டேனே!

பணிவு கொண்ட மனமே பதியைக் கண்டு கொண்டதனால்
துவளாமல் தவறாமல் தொடர்ந்து முன்னேற
துணிவு கொண்டதே துன்பமெல்லாமின்ப மானதே
மருட்டும் பந்தபாசம் தூரம் போனதே வெகு தூரம் போனதே

எய்ப்பும் இளைப்புமின்றி சாதனையில் தொடர்ந்து செல்ல
கைத்தலம் பற்றியே கருணைமிகு நம் பாபா
மெய்யான ஞானவழி இதுவென காட்டிடுவார்
தாதாவின் ரூபத்தில் நின்று ஒளியூட்டிடுவார்

துளியான ஒளி வெள்ளம் பரவி நின்றதே பூரித்து
உடலெங்கும் பரவசமாய்ப் படர்ந்து நிறைந்ததே
களிகூறும் காட்சிமிகு சத்யுகம் நம்
வசப்பட்டதே வசந்தம் நம் வழிப்பட்டதே

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40
அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5 R.No.49463/87